பூமராங்

அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் காலாண்டு மின்இதழ்

இதழ்: 1 தை 2024

புத்தாண்டு சிறப்பிதழ்

உள்ளே...

01 ஆசிரியத் தலையங்கம்

03 கவிஞர் அம்பிக்கு 95

04 வாசிப்பு அனுபவமும் வாசகர் வட்டங்களும் - முருகபூபதி

08 பிறந்த நாள்: எழுத்தாளர் பாடும்மீன் சு.ஶ்ரீகந்தராசா

10 நூல் வெளியீடு: திரு. ஜெயராமசர்மா

11 கவிதை : வாசி - ஞா.டி. டிலோசினி

12 கட்டுரை : பாலஸ்தீனப் பெண் கவிஞர்கள்- ஜங்கரன் விக்கினேஸ்வரா

15. குறுநாவல் விருது : திருமதி. தேவகி கருணாகரன்

16. நூல் வெளியீடு: லயனல் போப்பகே

17 நூல் வெளியீடு : ஜேகேயின் "வெள்ளி"

18. பாராட்டு விழா: லெ. முருகபூபதி

20. நூல் வெளியீடு: கலாசூரி சிவகுருநாதன்.

21 கரிகாற்சோழன் விருதுகள்

23. வாசிப்பனுபவம்: பண்ணையில் ஒரு மிருகம்

25. தை 2024 செய்திகள்

28. சிறப்பிதழ் வெளியீடு: தாமரைச்செல்வி

30. சிறுகதை: காஃபி ஷாப் - கனகா கணேஷ்

34. சிறுகதை: வழிப்பகை - கன்பரா யோகன்

38. சிறுகதை: இருளிலிருந்து வெளிச்சத்திற்கு - தேவகி கருணாகரன்

41. சிறுகதை: பேய்க்கதை - எஸ். கிருஷ்ணமூர்த்தி

43. நூல் நயவுரை- பாடும்மீன் சு. ஶ்ரீ கந்தராசா - எங்கள் தேசம்

47. சிறுகதை: என்ர ராசாவுக்கு - கிறிஸ்டி நல்லரெத்தினம்

பூமராங்

ஆசிரியத் தலையங்கம்

கலை, இலக்கிய, சமூகப்பணிகளில் இணைந்திருப்போம்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்.

அனைவருக்கும் 2024 ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தைத்திருநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர், 2001 ஆம் ஆண்டு தமிழ் எழுத்தாளர் விழாவை நடத்தியதன்மூலம் அவுஸ்திரேலியா கண்டத்தில் வதியும் இலக்கியப் படைப்பாளிகள், நடனம், இசை, கூத்து, நாடகத்துறை சார்ந்த கலைஞர்கள், மற்றும் வானொலி, பத்திரிகை ஊடகவியலாளர்கள், வாசகர்களை இணைத்து, " அறிந்ததை பகிர்தல் அறியாததை அறிந்து கொள்ள முயல்தல் " என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இயக்கமே, பின்னர் அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் என்ற பெயரில் ஒரு அமைப்பாக உருவாகியது என்பதை நன்கு அறிந்திருப்பீர்கள்.

கடந்த 2004 ஆம் ஆண்டிற்குப்பின்னர் இந்த அமைப்பு அவுஸ்திரேலியாவில் விக்ரோரியா மாநிலத்தில் பதிவுசெய்யப்பட்டது.



இதுவரையில் மெல்பன், கன்பரா, சிட்னி, கோல்ட் கோஸ்ட் ஆகிய மாநகரங்களில் எமது சங்கம், தமிழ் எழுத்தாளர் விழாக்களையும் நடத்தியுள்ளது.
அத்துடன் இலக்கிய சந்திப்புகளையும், நூல் வாசிப்பு அனுபவப் பகிர்வுகளையும், கண்காட்சிகளையும் அனைத்துலக பெண்கள் தின விழாவையும் நடத்தி வந்திருக்கும் எமது சங்கம், கடந்த இரண்டு வருடகாலமாக இலங்கை எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், அவர்கள் வெளியிடும் கலை, இலக்கியம் சார்ந்த (சிறுகதை, நாவல், கவிதை , கட்டுரை) நூல்களில் அதிசிறந்தனவற்றை நடுவர்களின் மூலம் தெரிவுசெய்து இலங்கை நாணயத்தில் தலா 50 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் சான்றிதழும் வழங்கி வருகிறது.
கொவிட் பெருந்தொற்றுக்காலத்திலும் எமது சங்கம் பல நிகழ்ச்சிகளை மெய் நிகர் ஊடாக நடத்தியிருக்கிறது.
எமது சங்கம் 2010 ஆம் ஆண்டில், பூமராங் என்ற சிறப்பிதழையும் வெளியிட்டது.
அதனையடுத்து சங்கத்திற்கென ஒரு இணையத்தளத்தையும் அறிமுகப்படுத்தியது.
தற்போது உங்கள் பார்வைக்கு இணைக்கப்பட்டுள்ள பூமாரங் மின்னிதழ், தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வெளிவரவுள்ளது.
காலாண்டு இதழாக வெளிவரும் பூமராங் இதழுக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அத்துடன், சங்கத்தின் செய்திகளுக்கும், சங்கத்தின் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட கலை, இலக்கிய தகவல்களுக்கும் பூமராங்கில் முன்னுரிமை வழங்கப்படும்.
ஆக்கபூர்வமான கருத்துக்கள் சங்கமிக்கும் இதழாக பூமராங் வெளிவரும்.
தொடர்புகளுக்கு: atlas25012016@gmail.com

பூமராங்கில் இடம்பெறும் ஓவியங்களை வரைந்து வழங்கியதுடன், பக்கங்களை வடிவமைப்பதிலும், மின்னூலாக பதிவேற்றுவதிலும்ஆக்கபூர்வமாக உதவிய சங்கத்தின் நடப்பாண்டு தலைவர், எழுத்தாளர் – ஓவியர் திரு. **கிறிஸ்டி நல்லரெத்தினம்** அவர்களுக்கும் சங்கம் நன்றி தெரிவிக்கின்றது.

கவிஞர் அம்பிக்கு பெப்ரவரி மாதம் 95 வயது

மூத்த கவிஞரும் முன்னாள் ஆசிரியருமான கவிஞர் அம்பி அவர்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி 95 வயது பிறந்ததினம்.

எமது சங்கத்தின் காப்பாளராக திகழும் இராமலிங்கம் அம்பிகைபாகர் என்ற இயற்பெயரைக்கொண்ட கவிஞர் அம்பி
இலங்கையில் வடக்கே நாவற்குழியில் பிறந்தார்.
தனது ஆரம்பக்கல்வியை நாவற்குழி சி.எம்.எஸ் பாடசாலையிலும் பின்னர் உயர் கல்வியை யாழ். பரி. யோவான் கல்லூரியிலும் தொடர்ந்த அவர், அறிவியல் மற்றும் கணித ஆசிரியராக இலங்கையில் பல பாகங்களிலும் பணியாற்றினார்.
கொழும்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் தமிழ் பாடநூல் ஆசிரியராகவும் பணியாற்றிய அம்பி, 1981 இல் பாப்புவா நியூகினி நாட்டிற்கு பணிநிமித்தம் சென்று அதன்பின்னர் 1992 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தார்.
இலக்கிய விருதுகளும் பெற்றிருக்கும் கவிஞர் அம்பி அவர்களை வாழ்த்துகின்றோம்!

ஒருகோடி கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, ஒரு நூலகம் கட்டுவேன் என்று பதிலளித்தார் மகாத்மா காந்தி.

தனிமைத்தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள்..? என்று கேட்ட போது புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து விட்டு வருவேன் என்றார் ஜவஹர்லால் நேரு.

என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள் இங்கே ஒரு புத்தகப் புழு உறங்குகிறதென்றாராம் பெட்ரண்ட் ரஸல்.

மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு எது என்று வினவப்பட்டபோது, சற்றும் யோசிக்காமல் புத்தகம் என பதிலளித்தார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றாராம் நெல்சன் மண்டேலா.

பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் எனக் கேட்டபோது புத்தகங்கள் வேண்டும் என தயக்கமின்றி லெனின் கூறியதும், குவிந்த புத்தகங்கள் பல இலட்சம்.

ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக் கொள்ளும்போது வரும் முன் பணத்தில் முதல் நூறு டொலருக்கு புத்தகம் வாங்குவாராம் சார்லிசாப்லின்.

ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித்தரும் ஆகச் சிறந்த பரிசு ஒரு புத்தகம்தான் என்றார் வின்ஸ்டன் சர்ச்சில்.

பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் எவை என கேட்கப்பட்டபோது புத்தகங்கள்தான் என்றார் மார்டின் லூதர்கிங்.

தான் தூக்கிலிடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை வாசித்துக்கொண்டே இருந்தாராம் பகத்சிங்.

நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன் என்றார் ஆபிரகாம் லிங்கன்.

ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள்; அவனே எனது வழிகாட்டி – என்றார் ஜூலியஸ் சீசர்.

இந்த வரிகளை எம்மிடம் விட்டுச்சென்றவர்கள்தான் உலகத்தலைவர்களும் அறிஞர்களும்!

சரி, அவர்கள் இன்றில்லை. மறைந்துவிட்டார்கள்! போகட்டும். புத்தகங்கள் பற்றி எங்கள் இலங்கைத் தலைவர்கள் – அறிஞர்கள் ஏதும் சொல்லியிருந்தால், அவை பற்றியும் எழுத்தாளர்களும் வாசகர்களும் அறிந்துகொள்ளத் துடிப்பார்கள் என்றே நம்புகின்றோம்.

சமகாலத்தில் அடிக்கடி புதிய புதிய புத்தகங்களின் வெளியீட்டு விழாக்கள் நடப்பதை பார்த்திருப்பீர்கள். பின்னர், அந்த நிகழ்ச்சிகளின் படங்களை பத்திரிகைகளிலும் பார்ப்பீர்கள். புத்தகம் எழுதி வெளியிட்ட எழுத்தாளரும், முதல் பிரதி – சிறப்புப் பிரதி பெற்ற பிரமுகர்களும், நிகழ்ச்சியில் உரையாற்றிய பேச்சாளர்களும் தத்தம் முகநூல்களில், வாட்ஸ் அப்பில் அந்தப்படங்களை பதிவுசெய்து உலகெங்கும் அனுப்புவார்கள். பிறகு, எத்தனை லைக் வந்தது என்று பார்ப்பார்கள்.

அத்துடன் விடயம் முடிந்தது என்று சிவனே என்று ஓய்வெடுப்பார்கள். பெரும்பாலான புத்தக வெளியீடுகளில் பேசவருபவர்கள், குறிப்பிட்ட புத்தகத்தை முழுமையாக வாசிக்காமலேயே வந்து, நுனிப்புல் மேய்ந்துவிட்டு செல்லும் காட்சிகளையும் ரசித்திருப்பீர்கள்.

வரலாறு, இலக்கியம் என்பன அஞ்சல் ஓட்டத்திற்கு ஒப்பானது. ஒருவரால் முன்னெடுக்கப்படுவது மற்றும் ஒருவரால் தொடரப்படுவது!.

ஒரு காலகட்டத்தில், பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்தும் பலாலி ஆசிரியப்பயிற்சிக் கலாசாலையிலிருந்தும் பலர் பட்டதாரிகளாகவும் ஆசிரியர்களாகவும் வெளியே வந்தார்கள். அவர்களில் பல எழுத்தாளர்களும் விமர்சகர்களும் , கலைஞர்களும் இடம்பெற்றனர்.

ஆனால், சமகாலம் எப்படி இருக்கிறது...?

தொடர்பூடகம் வீச்சாகியிருக்கும் இக்காலத்தில் நிலைமை என்ன...? பெரும்பாலான எழுத்தாளர்கள் தமக்குத்தாமே புகழ் தேடுவதற்காக பிரபலங்களின் முன்னுரை, அணிந்துரைக்கு அலையும் காட்சிகளும் பெருகியிருக்கின்றன. எத்தனை புத்தகம் எழுதினோம் ? என்பது முக்கியமல்ல, எத்தனை வாசகர்களை உருவாக்கினோம் என்று எழுத்தாளர்கள் சிந்திக்கிறார்களா..?

ஊருக்கு ஊர் வாசகர் வட்டங்களை அமைத்து, மாதம் ஒரு தடவை ஒரு நூலைப்பற்றி, அல்லது அண்மையில் படித்த பிடித்தமான நூலைப்பற்றி ஒவ்வொருவரும் பேசலாம். புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிகளில் இளம் தலைமுறையினரான பல்கலைக்கழக – பாடசாலை மாணவர்களுக்கும் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கலாம்.
அவர்களிடம் புத்தகத்தை வழங்கி, முழுமையாக படித்துவிட்டு வந்து வாசிப்பு அனுபவத்தை பகிர்ந்துகொள்ளுமாறு தூண்டலாம். இலக்கிய அன்பர்கள் தத்தமது வீடுகளில் கூட வாசகர்களை அழைத்து பேசவைக்கலாம்.

நான் வதியும் விக்ரோரியா மாநிலத்தில் மெல்பன் நகரில், கடந்த சில வருடங்களாக வாசகர் வட்டம் என்ற அமைப்பு, வாசகர் சந்திப்புகளை நடத்திவருகிறது.
இதில் கலந்துகொள்பவர்களுக்கு ஒரு புத்தகத்தின் பிரதிகள் வழங்கப்படுகின்றன.
அவர்கள் அதனை எடுத்துச்சென்று வாசித்து விட்டு, அடுத்த மாத சந்திப்பில், குறிப்பிட்ட புத்தகம் பற்றி தமது வாசிப்பு அனுபவத்தை சமர்ப்பிக்கவேண்டும்.
நிகழ்ச்சி இறுதியில், மற்றும் ஒரு புத்தகத்தின் பிரதிகள் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த நடைமுறை சீராகவும் புரிந்துணர்வோடும் வெற்றிகரமாக நிகழ்ந்துவருகிறது.

அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கமும் வாசிப்பு அனுபவப்பகிர்வு நிகழ்ச்சிகளை நடத்திவருகிறது. இச்சங்கத்தின் காப்பாளரும் எழுத்தாளரும் நாடக கலைஞருமான கலைவளன் சிசு. நாகேந்திரன் என்பவர் தனது 98 வயதில் காலமாகிவிட்டார். அன்னாருக்கான நினைவு அஞ்சலிக்கூட்டத்தையும், வெறுமனே அவரது நினைவுப்பகிர்வாக நடத்தாமல், அவர் முன்னர் எழுதிய மூன்று புத்தகங்கள் பற்றிய வாசிப்பு அனுபவப்பகிர்வு நிகழ்ச்சியாகவும் நடத்தினார்கள்.
இச்சங்கம் கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் இலங்கை தமிழ் எழுத்தாளர்களின் சிறந்த நூல்களைத் தெரிவு செய்து இலங்கை நாணயத்தில் ஐம்பதினாயிரம் ரூபா பரிசு வழங்கிவருகிறது.
சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை ஆகிய நான்கு துறைகளில் அவ்வாறு தலா ஐம்பதினாயிரம் ரூபா பரிசுபெற்ற நூல்கள் பற்றிய வாசிப்பு அனுபவப்பகிர்வு நிகழ்ச்சியையும் கடந்த காலங்களில் சங்கம் நடத்தியிருக்கிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகளின் மூலம் தேர்ந்த வாசகர்களை உருவாக்கலாம்.

எழுத்தாளர் 'பாடும்மீன்' சு. ஸ்ரீகந்தராசா 70 ஆவது பிறந்த தினம்

அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் முன்னாள் தலைவரும் நடப்பாண்டு செயற்குழு உறுப்பினருமான எழுத்தாளர் – சட்டத்தரணி 'பாடும்மீன்' சு. ஸ்ரீகந்தராசாவின் 70 ஆவது பிறந்த தின விழா மெல்பனில் கடந்த ஒக்டோபர் மாதம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அன்பர்கள் பலரும் திரளாக கலந்துகொண்டனர்.

அவரின் கலை, இலக்கிய, வானொலி மற்றும் ஊடகப்பணிகளை பாராட்டி பலரும் உரையாற்றி சிறப்பித்தனர்.

பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா அவர்களுக்கு சங்கத்தின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ஜெயராமசர்மாவின் புதிய நூல் வெளியீடு

எழுத்தாளர் திரு. ஜெயராம சர்மாவின் புதிய நூல் “ஆஸ்திரேலிய நாட்டில் தமிழ் மொழியின் வளர்ச்சி” கடந்த ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி மெல்பனில் வெளியிடப்பட்டது.

கலாநிதி ஶ்ரீ கௌரிசங்கர் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் எழுத்தாளர் திரு. கந்தையா குமாரதாசன் நூல் மதிப்பீட்டுரையையும் நூலாசிரியர் ஏற்புரையையும் நிகழ்த்தினர்.

வாசி!

அஞ்ஞானம் அகன்று
மெய்ஞ்ஞானம் பெற வாசி!
விஞ்ஞான உலகின்
விந்தையறிய வாசி!
அறியாமை இருள் நீங்கி
அறிவுச் சுடர் வீச வாசி!
புத்தகப் பூச்சியில்லாது
புதிய நடப்பறிய வாசி!
தூங்கிக் கிடக்கும்
சிந்தையை
தூண்டி விட வாசி!
நற்சபை நடுவே பேச
நல்ல நூல்களை அதிகம்
வாசி!
நல்ல சிந்தை பிறக்க
நற்சான்றோர் நூல்களை
வாசி!
தினம் ஒருமுறை வாசி!
திருக்குறள் போன்ற அரிய
நூல் வாசி!
'ல'கர, 'ழ'கர, 'ள'கர
'ண'கர, 'ந'கர, 'ன'கர
பேதமறிந்து வாசி!
வாசிப்பை நேசி!
நேசித்து வாசி!
வளம் பெறும் வாழ்வு.

ஞா.டிலோசினி

திருகோணமலை மாவட்டம் சேனையூரைச்சேர்ந்த ஞா. டிலோசினி, கிழக்கு பல்கலைக்கழகத்தில் படிக்கின்றபோது, அவுஸ்திரேலியா தமிழ் படைப்புலகம் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டவர்.
தற்போது ஆசிரியையாக பணியாற்றுகிறார்.
கவிதை, விமர்சனம், திறனாய்வு முதலான துறைகளில் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.

பாலஸ்தீனப் பெண் கவிஞர்கள்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

வரலாற்று ரீதியில் பாலஸ்தீனத்துக்கு என்று செறிவான இலக்கிய மரபு உண்டு. மிக நுட்பமான இலக்கண வரம்புக்கு உட்படுத்தப்பட்ட கவிதை வடிவங்கள், நாடகங்கள், நாவல்கள் பாலஸ்தீனத்தில் படைக்கப்பட்டுள்ளன. ஆனால் 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் தோற்றம் பெற்றபோது பாலஸ்தீன இலக்கிய வாழ்வு திடீரென்று மூச்சை இழந்தது.

ஆயினும் துண்டிக்கப்பட்ட உயிர் மூச்சு மீள சுவாசித்தது. போரின் தோல்வி, தோழர்களின் இழப்பு, சிறைக்காவல், சித்ரவதைக்கூடம், சிறுவர்கள் மீதான தாக்குதல், ஐக்கிய நாடுகள் சபையின் பாராமுகம், தாயகம் மீதான ஏக்கம் என கவிதையின் பாடுபொருள்கள் பாலஸ்தீனத்தில் மீள உயிர் பெற்றன.

பாலஸ்தீன எழுத்தாளர்கள் பலரின் எழுத்துலகின் மையத்தில் பாலஸ்தீனப் பேரழிவு தெளிவாக வெளிப்பட்டு உள்ளது. ஏதிலிகளாக்கப்பட்ட, குடிபெயர்ந்த, ஊனமாக்கப்பட்ட மக்களின் வாழ்வில் விழும் துயரப் பெருநிழலை பல்வகைப்பட்ட இலக்கிய வடிவங்களையும் புனைவு வகைமைகளையும் கையாண்டு உலகின்முன் சித்தரிக்க இவர்கள் முயற்சி செய்துள்ளனர்.

இத்தைய பின்னணியில் உருவாகிய இளங்கவி ஹெபா சவுதியின் மெக்காவில் அகதி முகாமில் 1991 பிறந்தவர். பின்னர் காசா இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் இளநிலை உயிர்வேதியியல், அல் அகர் பல்கலைக்கழகத்தில் மருத்துவ உணவியல் முதுநிலை பட்டங்களைப் படித்தவர். உணவியலாளராகப் பணியாற்றிக்கொண்டே எழுத்திலும் விடாமல் செயலாற்றி வந்தார் ஹெபா.

கவிஞர் ஹெபா அபு நாடா இஸ்ரேல் படைகளின் குண்டுவீச்சால் படுகொலை செய்யப்பட்டார். பாலஸ்தீன பண்பாட்டு அமைச்சகம் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.
20/10/23 வெள்ளியன்று தெற்கு காசாவில் உள்ள கான்யூனிஸ் நகரில் உள்ள தன் வீட்டில் இருந்த கவிஞர் ஹெபா குண்டுவீச்சுக்கு இலக்காகி கொல்லப்பட்டார். அவருக்கு வயது 32.
கதைகள், கவிதைகள், நாவல்கள் என எழுதிவந்த பாலஸ்தீனத்தின் சம கால முக்கிய பெண் எழுத்தாளர்.

“இறந்துபோகிறவர்களுக்கு ஆக்சிஜன் இல்லை’ என்கிற இவரின் நாவல், 2017ஆம் ஆண்டில் சார்ஜா இலக்கிய விருதில் இரண்டாம் இடத்தைப் பிடித்தது.
கொல்லப்படுவதற்கு முந்தைய நாள் (அக்டோபர் 19) ஹெபா அபு நாடா எழுதிய கவிதை:

என் நண்பர்களின் பட்டியல்
சுருங்கி வருகிறது!
நண்பர்கள்
சின்னச் சின்ன
சவப்பெட்டிகளாகிக் கொண்டிருக்கிறார்கள்!
ஏவுகணைகளைவிட
வேகமாகப் பறந்திறக்கிற அவர்களை
என்னால்
மீட்க முடியவில்லை!
காக்க முடியவில்லை!
எனக்கு அழ முடியவில்லை!
எனக்கு
என்ன செய்வதென்றும் தெரியவில்லை!
ஒவ்வொரு நாளும்
என் நண்பர்களின் பட்டியல்
சுருங்கி வருகிறது!
இது வெறும் பெயர்கள் அல்ல!
வேறு பெயர்களிலும் முகங்களிலும் இருந்த
அவர்களும் நானே!
நானும் அவர்களே!
அல்லாவே!
மாபெரும் இச் “சா” விருந்தில்
நான் என்ன செய்யமுடியும்?
எந்தக் கொம்பனாலும்
கனவிலுங் கூட
என் நண்பர்களை மீட்டுத் தரமுடியாது.
– ஹெபா அபு நாடா

பாலஸ்தீனப் பெண் கவிஞர்கள்:

இவரைப் போலவே இன்னும் பல பாலஸ்தீனப் பெண் கவிஞர்களின் கவிதைகளை உயிர்ப்பூட்டும் வரிகளாக காணலாம். ஃபத்வா துக்கான் எனும் பாலஸ்தீனப் பெண் கவிஞரின்
"திருடப்பட்ட
உன் குழந்தைகளின் சிரிப்பிலிருந்து
சிதைவுகளில் இருந்து
இரத்தம் உறைந்த சுவர்களில் இருந்து
வாழ்வினதும் மரணத்தினதும்
நடுக்கங்களில் இருந்து
புதிய வாழ்வொன்று கிளர்ந்தெழும்
அது எழவே செய்யும்" எனும் வரிகள் போராடும் மண்ணின் யதார்த்தத்தை வெளிப்படுத்துகிறது.

அமினா கசக் எனும் பாலஸ்தீனப் பெண் கவிஞரின் மற்றோர் கவிதை
"இப்போது மௌனமாக
அசைவற்றுக் கிடக்கும் ஊர்க் குருவியைப்போல்
அந்த இரவின் இருண்ட
தனிமையில் திரும்பிவர
உனக்கு ஒருபோதும் சுதந்திரம் இருந்ததில்லை" என வியாபிக்கிறது.

அத்துடன் ஹானான் மிக்காயில் அஷ்றாவி எனும் பாலஸ்தீனப் பெண் கவிஞரின் வரிகள்
"நிலம் இவ்வளவு பாரமாய் இருக்குமென்று
நான் ஒருபோதும்
நினைத்ததில்லை" என விளிக்கின்றார்.

சுலஃபா ஹிஜாவி எனும் போராளி கவிஞையின் கவிதை
"நாங்கள்
இறுகப்பற்றி அணைத்து
நின்றோம்
பாடினோம்;
செய்த்தா எங்கள் பூமி
பூமியின் இதயம்
நாம் அதன் கிளைகள்" என்றும்
"மனிதரும் கற்களும்
அரைக்கப்பட்டு
புழுதியாய் மாறினர்
சாத்தியமற்றதின் வெளிச்சத்தில்
என்றைக்குமாக தூவிக்
கலந்தனர்" என உலகிற்கு உரத்துக் கூவுகிறார்.

மனதை நெருடும் பெண் கவிஞர்களின் வரிகள்:

லைலா அல்லுஸ் என்ற பெண் கவிஞரின் வரிகள் இன்னும் தாக்கமானவை.
"ஓராயிரம் பெருவெளிகளை உருவாக்கி
நஞ்சூட்டிய அம்புகளை
அவற்றுள் செருகி
என் நிலம் எங்கும்
நட்டு வைத்துள்ளனர்
என் பாட்டனின் வாளை ஒளித்துவைத்துள்ளனர்
அவரின் எச்சங்களை
என் கண் எதிரே விளைகூறி விற்கின்றனர் என இக்கவிஞர் தெரிவிக்கின்றார்.

சல்மா கத்றா ஜய்யூசி எழுதிய
"இளமைக் கனவுகள் போல
சவப்பெட்டியும் தொலைந்து
போகட்டும்
என்றே நான் விரும்புகிறேன்" என அழும் குரலில் எழும் கவிதைகள் மனதை நெருடுகின்றன.

(முற்றும்)

குறுநாவலுக்கு இலக்கிய விருது பெற்ற

திருமதி. தேவகி கருணாகரன்

குறுநாவல்களுக்கான ஸீரோ டிகிரி பப்ளிஷிங் இலக்கிய விருது 2023 இல் சிட்னியில் வதியும் எழுத்தாளர் திருமதி. தேவகி கருணாகரன் அவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியான செய்தி! அவரின் "யாழினி" குறுநாவலுக்கு இவ்விருது கிடைத்துள்ளது.

இலங்கை வானொலியின் "இசையும் கதையும்" நிகழ்ச்சிக்காக கதை எழுதத்தொடங்கியவர் நீண்ட இடைவெளியின் பின்னர் ஓய்வு பெற்றபின்பு மீண்டும் உற்சாகத்துடன் எழுதத் தொடங்கியுள்ளார். இதுவரையில் முப்பதிற்கும் அதிகமான சிறுகதைகளும், ஒரு குறுநாவலும் எழுதியுள்ள தேவகி கருணாகரன், பெண்ணியம் சார்ந்த புனைகதைகளை சிறப்பாக படைத்துள்ளார்.

ஒரு குறுநாவலுக்கான குரல், மொழி, தொனி, வடிவம், கதை கட்டுமானம், வாழ்வியல் சார்ந்த யதார்த்தம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு ஸீரோ டிகிரி இலக்கிய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது. போட்டிக்கு கிடைக்கப்பெற்ற 70 குறுநாவல்களில் இருந்து தெரிவான மூன்று குறுநாவல்களுக்கு இம்முறை விருது வழங்கப்பட்டது.

விருது விழாவில் உரையாற்றிய எழுத்தாளர் தமயந்தி , " நவீன தமிழ்க் கதையாடல் இன்றைய கால கட்டத்தில் கண்டிருக்கும் வீச்சு மிக முக்கியமானது. இம்மூன்று குறுநாவல்களிலும் யதார்த்த உளவியல் சிக்கல்கள் வாழ்வின் விளிம்பு கோடு தாண்டி அட்சரம் மீறாமல் சித்தரிக்கப்படுகிறது. மொழியின் சாட்சியங்கள் வாழ்வியலைப் பின்னும்போது இருளும் வெயிலும் கட்டிய ஒரு இருள் படுக்கையை ஒத்திருக்கிறது. வாழ்வின் புதிர்களைப் புனைவில் அவிழ்க்க முயலும் அத்தனை கூறுகளும் இலக்கியத்தின் mystical threshold ஐ விரிவாக்குகின்றன. மூன்று குறுநாவல்களும் இதன் சான்றுகளே! " எனத் தெரிவித்துள்ளார்.

திருமதி. தேவகி கருணாகரனுக்கு எமது பாராட்டுகள்!

மெல்பனில் நடந்த
லயனல் போப்பகேயின்
நூல் வெளியீடும் ஆவணப்படம் திரையிடலும்

தமிழ் அபிமானி, எழுத்தாளர், கலை, இலக்கிய ஆர்வலர், மனித உரிமைச்செயற்பாட்டாளர் கலாநிதி லயனல்போப்பகேயின் வாழ்க்கைச்சரிதம் பேசும் ஆங்கில – சிங்கள நூல்களின் வெளியீட்டு அரங்கும், அவர் சம்பந்தப்பட்ட திவந்த என்ற ஆவணப்படக்காட்சியும் கடந்த டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி மெல்பனில் Glen Waverley Neighbourhood House இல் சிறப்பாக நடைபெற்றது.

கலாநிதி லயனல்போப்பகே, அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் நிகழ்ச்சிகளிலும் இணைந்திருக்கும் கலா ரசிகர்.

சிறந்த பாடகருமான லயனல்போப்பகே, தன்னார்வத் தொண்டருமாவார்.

கன்பராவில் 2004 ஆம் நடந்த நான்காவது தமிழ் எழுத்தாளர் விழாவிலும், மெல்பனில் 2019 ஆம் ஆண்டு நடந்த இலக்கிய மொழிபெயர்ப்பு அரங்கிலும் பங்கேற்று உரையாற்றியவர்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களுக்காகவும், புலம்பெயர்ந்து வந்த தமிழ் அகதிகளுக்காகவும் தொடர்ந்தும் குரல் எழுப்பிவருவதுடன் ஆங்கில மொழியில் ஏராளமான கட்டுரைகளும் எழுதியிருப்பவர்.

---0---

எழுத்தாளர் ஜேகேயின்

வெள்ளி

நாவல் வெளியீட்டு அரங்கு

மெல்பனில் வதியும் எழுத்தாளர் ஜே.கே. யின் வெள்ளி நாவல் வெளியீட்டு அரங்கு கடந்த 2023 டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி, மெல்பனில் Clyde சமூக மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நாவல் வெளியீட்டுடன், ஓவியக்கண்காட்சியும், இசையும் நடனமும் இணைந்த நிகழ்ச்சியும் இடம்பெற்றன. இந்நிகழ்வை மெல்பன் வாசகர் வட்டம் ஏற்பாடு செய்திருந்தது.

மெல்பனில் எழுத்தாளர் முருகபூபதிக்கு நடந்த பாராட்டு விழா

அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம், இலங்கை மாணவர் கல்வி நிதியம் முதலானவற்றின் நிறுவனரும் பிரபல எழுத்தாளரும், ஊடகவியலாளருமான திரு. லெ.முருகபூபதிக்கு , கனடா தமிழ் இலக்கியத் தோட்டம், 2022 ஆம் ஆண்டிற்கான இயல் விருதையும், பிரான்ஸ் வென்மேரி அறக்கட்டளை, இலக்கியச் சாதனையாளர் விருதையும் வழங்கிக் கௌரவித்திருப்பதை முன்னிட்டு, அவரைப் பாராட்டு முகமாக அவுஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச் சங்கத்தின் ஏற்பாட்டில் தலைவர் திரு. கிறிஸ்டி நல்லரெத்தினம் தலைமையில் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மெல்பனில் Berwick இல் அமைந்துள்ள, மூத்த பிரசைகள் மண்டபத்தில் விழா நடைபெற்றது.

செல்விகள் மோஷிகா பிரேமதாச, ஶ்ரீசேகா பிரேமதாச ஆகியோர் தமிழ் வாழ்த்துப்பாடினர்.

எழுத்தாளர், சட்டத்தரணி பாடும் மீன் சு. ஶ்ரீகந்தராசாவின் ஒருங்கிணைப்பில் நடந்த இவ்விழாவில், முருகபூபதியின் தன்னார்வத் தொண்டுப்பணிகள், மற்றும் இலக்கியப்பணிகள் உட்பட படைப்பு முயற்சிகள் தொடர்பாக திருமதிகள் சாந்தி சிவகுமார், கலாதேவி பால சண்முகன், எழுத்தாளர்கள் சங்கர சுப்பிரமணியன், ஜே.கே. ஜெயக்குமாரன், பாடும் மீன் சு. ஶ்ரீகந்தராசா, நொயல் நடேசன், கலாநிதி ஶ்ரீ கௌரி சங்கர், சட்டத்தரணி செல்வத்துரை ரவீந்திரன், மருத்துவர் நளிமுடீன், மற்றும் திரு. ரத்தினசபாபதி ஐயர் ஆகியோர் உரையாற்றினர்.

சட்டத்தரணி மரியம் நளிமுடீன் சங்கத்தின் சார்பில் முருகபூபதிக்கு பாராட்டு விருது வழங்கினார்.

நிகழ்ச்சியின் இறுதியில் முருகபூபதி தனது ஏற்புரையை நிகழ்த்தினார்.

அவுஸ்திரேலிய
தமிழ் இலக்கிய
கலைச்சங்கம்
விழா



கன்பராவில்

கலாசூரி சிவகுருநாதன் நூல் வெளியீடு

இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதி கன்பரா தமிழ் மூத்த பிரஜைகள் சங்க மண்டபத்தில் வெளியிடப்பட உள்ளது.
இந்நூலை ஜங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்துள்ளார்.

தலைமை:
திரு. க. திருவருள் வள்ளல்
(சட்டத்தரணி,இலக்கிய ஆர்வலர்)

நூல் அறிமுகவுரை:
லெ. முருகபூபதி
(மூத்த எழுத்தாளர்)

சிறப்பு அதிதி:
திருமதி. சித்ராங்கனி வாகிஷ்வரா
(இலங்கை அரச உயர் ஸ்தானிகர்)

இ.சிவகுருநாதன் ஊடகபணி சிறப்புரை:
திரு. நிமலன் கார்த்திகேயன் MBA
(இலக்கிய ஆர்வலர்)

தினகரனில் சிவகுருநாதன் சிறப்புரை:
திரு. சுந்தரதாஸ்
(எழுத்தாளர், இலக்கிய ஆர்வலர்)

ஏற்புரை :
திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா
(நூலின் தொகுப்பாசிரியர்)

நன்றியுரை:
திரு. சின்னத்துரை மயூரன்
(சட்டத்தரணி, பட்டயக் கணக்காளர், நிகழ்வு ஒழுங்கமைப்பாளர்)

இடம்: கன்பரா தமிழ் மூத்த பிரஜைகள் சங்க மண்டபம்.

Tamil Senior Citizen Hall, 11 Bromby Street, Isaacs ACT 2607.

காலம்: சனிக்கிழமை 20.01.2024 மாலை 4.30 மணி

தமிழ்நாடு தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தின் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறையில் , சிங்கப்பூர் முஸ்தபா அறக்கட்டளை நிறுவியுள்ள தமிழவேள் கோ. சாரங்கபாணி இருக்கை வாயிலாக வழங்கப்படும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளைச்சேர்ந்த இலக்கியப் படைப்பாளிகளுக்கான கரிகாற்சோழன் விருதுகள் வழங்கும் விழா கடந்த டிசம்பர் 05 ஆம் திகதி நடைபெற்றது.

இம்முறை இந்த விருதுகள் இலங்கையரான, தற்போது அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர் – விலங்கு மருத்துவர் **நொயல் நடேசன்** எழுதிய **பண்ணையில் ஒரு மிருகம்** நாவலுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கை எழுத்தாளர் **சிவஆரூரன்** எழுதியுள்ள **ஆதுரசாலை** என்ற நாவலுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

சான்றிதழும் தங்கப்பதக்கமும் குறிப்பிட்ட எழுத்தாளர்கள் பெற்றுள்ளனர். நொயல் நடேசன், சிறுகதை, நாவல், பயண இலக்கியம் மற்றும் விலங்கு மருத்துவம் தொடர்பான அபுனைவு படைப்புகள் பலவும் எழுதியிருப்பவர். இவரது சில நூல்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளிவந்துள்ளன.

சிவ. ஆரூரன் சில வருடங்கள் இலங்கை சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டு, பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டவர். சிறையிலிருந்தவாறே இலக்கியப்பிரதிகள் எழுதியிருக்கும் சிவஆரூரனின் ஆதுரசாலை நாவலுக்கு இலங்கையில் தேசிய சாகித்திய விருதும் கிடைத்திருக்கிறது.

தஞ்சாவூர்
2021

1985ல் செங்கல்பட்டிற்கு அருகே உள்ள கிராமத்தில் அமைந்துள்ள பண்ணையிலும் அதைச் சுற்றிய கிராமங்களில் நடைபெறும் நிகழ்வுகளை சமூதாயக் கண்ணோட்டத்துடன் பார்த்து பல மட்டங்களில் வாழும் கதைமாந்தர்களை கதைக்களமாக்கி பயணிக்கும் கதைசொல்லியின் நோக்கே இந்நாவல்.

இலங்கையைச் சேர்ந்த கால்நடை மருத்தவரான நூலாசிரியர் திரு. நோயல் நடேசன் எண்பதுகளில் இங்குள்ள ஒரு பண்ணையில் வாழ்ந்த அனுபவத்தினுள் உயிரோட்டமுள்ள கதாபாத்திரங்களை உலாவவிட்டு சமுதாய சீரழிவுகளை வாசகனுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

இந்த 150 ஏக்கர் பண்ணைக்குள் பல கதைமாந்தர்களை தன் எண்ணக் கூடையில நிரப்பிவந்து இங்கே கொட்டுகிறார் நூலாசிரியர். இம் மாந்தர்கள் சாதிய அடுக்குகளும் சமுதாய முரண்பாடுகளும் சமைத்து வைத்த சூழலில் தனிமரமாய் வாழும் போராட்ட வாழ்வை சித்தரிக்கிறது இந்நாவல்.

நாவலின் தலைப்பு “பண்ணையில் ஒரு மிருகம்” என்பதாக இருந்தாலும் இது மிருகங்களைப் பற்றியதே அல்ல! நூலாசிரியர் பேசுவது இப்பண்ணையில் உள்ள “மனித மிருகங்களை” பற்றியே என்பதை பக்கங்களை புரட்ட வாசகனுக்கு புரியும்.

வர்க்க பேதம், பெண்ணடிமை, சாதிப்பாகுபாடு, மலடி எனும் மடுவுக்குள் வாழும் மங்கை, உடல் பசிக்கு அதிகாரம் துணைபோகும் அவலம், கௌரவக் கொலை செய்யும் உரிமை, சமுதாயத்தில் பெண்ணின் வைப்பிடம், கீழ்தட்டு மக்களின் மௌனராகங்கள் என கதை விரிகிறது.

இந்த சமுதாய அவலங்களை பல தமிழ் எழுத்தாளர்கள் ஏற்கனவே எழுதிப்போயிருந்தாலும் அயல் சூழலில் இருந்து வந்த ஒரு ‘அன்னியனின் பார்வையில்’ இவை எவ்வாறு

புரிந்துகொள்ளப்படுகின்றன என்பதை சொல்லும் முதல் நூல் இது எனலாம்.

நாவலில் ஒரு அமானுஷ்ய பாத்திரமான கற்பகத்தை அறிமுகப்படுத்தி அதனூடாக கதை நகர்த்தும் யுக்தி நவீன தமிழ் நாவல்களில் அரிது.

கற்பனைக்கும் யதார்த்தத்திற்கும் இடையே பாலம் போட்டு அதில் கதாபாத்திரத்தை நடமாடவிடும் இந்த வித்தையில் முழு வெற்றியீட்டியுள்ளார் நூலாசிரியர். கற்பகத்தின் மரணத்திற்கு யார் காரணம், அது கொலையா தற்கொலையா எனும் முடிச்சுக்கள் அவிழும்போது வியந்து நிற்கிறோம்.

நூலாசிரியர் கதாபாத்திரங்களைப் படைத்து அவர்களை கொலு பொம்மைகளாக்கி அடுக்கிவைத்து அழகு பார்க்காமல் அவர்களை சதுரங்கக்காய்களாக்கி நகர்த்தி கதை சொல்லும் யுக்தியில் முழு வெற்றி பெற்றுள்ளார் என்றே கூறவேண்டும். காய்களாய் நகரும் கதைமாந்தர்கள் சமூக விதிமுறைகளை தகர்த்து வெற்றி கொள்ள முடியாமல் தவிப்பதை வாசகன் கைகட்டி மௌனித்து பார்க்கும் ஒரு அசௌகரிய நிலை கடைசிப்பக்கம் வரை தொடர்கிறது சாமர்த்தியமான காய்நகர்த்தல்களை உன்னிப்பாக நோக்காவிடில் அர்த்தங்கள் சமாதியாகிவிடும் அளவுக்கு இறுக்கம் இந்த எழுத்துக்களில் உண்டு.

நூலாசியர் ஒரு தேர்ச்சி பெற்ற கால்நடை வைத்தியர் என்பதால் பல நுணுக்கமான மிருக வைத்திய உண்மைகளையும், சினைப்படுத்தல், கன்று ஈனும் செயல்முறை, ஆட்டிற்கு கொம்பு தறித்தல் பற்றிய அருந்தகவல்களை அக்கறையுடன் மிக லாவகமாக கதைக்குள் புகுத்தி கதை நகர்த்தியது சிறப்பு.

மொத்தத்தில், சமுதாயத்தில் புரையோடியிருந்த வர்க்கபேதங்களையும் சாதிக் கொடுமைகளையும் மிக துல்லியமாய் ஆராய்ந்து மனதில் உறைக்கும்படி எழுதியுள்ள இந்நாவல் நிச்சயம் வாசிக்கப்பட வேண்டியதொன்று.

வார்த்தை ஜோடனைகள் இன்றி கதைமாந்தர்களையே பேச விட்டு அவர்கள் வார்த்தைகளாலேயே சமூக சீர்கேடுகளை எடுத்துக் கூறும் இந்நாவல் ஒரு சிறந்த வாசிப்பனுபவத்தை வாசகனுக்கு அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

குறிப்பு: புலம்பெயர்ந்து அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து வரும் நூலாசிரியர் நோயல் நடேசனின் ஊடக, இலக்கியச் செயற்பாடுகள் இதுவரையிலும் புலம்பெயர் சூழலிலேயே நடந்துவருகின்றன. அவுஸ்ரேலியாவில் 15 ஆண்டுகளாக ‘உதயம்’ என்ற பத்திரிகையை தமிழ் – ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் வெளியிட்டார். கூடவே ‘வாழும் சுவடுகள் 1 & 2’ என்ற இரண்டு கால்நடை வைத்திய அனுபவ நூல்களையும், ‘வண்ணாத்திகுளம்’, ‘அசோகனின் வைத்தியசாலை’, ‘கானல் தேசம்’ ஆகிய நாவல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். ‘வண்ணாத்திகுளம்’ ஆங்கில மொழியில் வெளியாகி, அமெரிக்காவின் பல்கலைக்கழகங்களில் ‘தெற்காசிய இலக்கியம்’ என்ற தலைப்பில் வைக்கப்பட்டுள்ளது.

(நன்றி கல்கி: 30-06-2022)

சிட்னியில் நடந்த தமிழ் எழுத்தாளர் விழா 2023

“அறிந்ததைப் பகிர்தல் , அறியாததை அறிந்து கொள்ள முயல்தல்” என்ற சிந்தனையை முன்னிறுத்தி 2001 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் தொடங்கப்பட்ட தமிழ் எழுத்தாளர் விழா இயக்கம், பின்பு ஆண்டுதோறும் மாநிலங்களில் முன்னெடுக்கப்பட்டது.

இவ்விழாவை வருடந்தோறும் தங்கு தடையின்றி நடத்திவரும் அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், இம்முறை சிட்னியில் கடந்த 2023 செப்டெம்பர் மாதம்10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தூங்காபி சமூக மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது.

சங்கத்தின் உறுப்பினர் எழுத்தாளர், சட்டத்தரணி (கலாநிதி) திருமதி சந்திரிக்கா சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற இவ்விழா நிகழ்ச்சிகளை எழுத்தாளரும், வானொலி ஊடகவியலாளருமான திரு. கானா. பிரபா தொகுத்து வழங்கினார்.

நாட்டியக் கலாநிதி (திருமதி) கார்த்திகா கணேசரின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ்விழாவில், உலகெங்கும் போர் அநர்த்தங்களினால் உயிர் நீத்த இன்னுயிர்களின் ஆத்ம சாந்திக்காக மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டதுடன், அவுஸ்திரேலியா ஆதிவாசிக்குடிமக்களும் நினைவு கூரப்பட்டனர்.

தமிழ் வாழ்த்துடன், அவுஸ்திரேலியா தேசிய கீதமும் பாடப்பட்டது. எழுத்தாளர் விழாவின் முதல் அமர்வில் நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தின் கம்பர்லாந்து மாநகர மேயர் திருமதி லிஸா லேக் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றினார்.

சிட்னியில் தமிழ் கற்றுவரும் மாணவர்களின் எழுத்தாற்றலை இனம்கண்டு, அவர்களை ஊக்குவிக்கும் முகமாக சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. கடந்த அரைநூற்றாண்டுக்கும் மேலாக படைபிலக்கியத்துறையில் ஈடுபட்டு, பல இலக்கியப் பரிசில்களும், இலங்கை தேசிய சாகித்திய விருது உட்பட பல

இலக்கிய விருதுகளும் பெற்றிருப்பவருமான **எழுத்தாளர் தாமரைச்செல்வி**க்கு வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

விருதாளருக்கான பாராட்டுரையை எழுத்தாளர் திரு.லெ. முருகபூபதி சமர்ப்பித்தார். அவுஸ்திரேலியாவில் இதுவரைகாலமும் வெளிவந்துள்ள தமிழ் நூல்கள், இதழ்கள், பத்திரிகைகள் இடம்பெற்ற கண்காட்சியும் நடைபெற்றது. சிட்னி தமிழ் வளர்ச்சி மன்றமும் கம்பர்லாந்து மாநகர சபை மற்றும் வென்ற் வேத்வில் மாநகரத்தின் பொது நூலகம் என்பன இந்த விழாவுக்கான அனுசரணையை வழங்கியிருந்தன.

முருகபூபதியின் தலைமையில் நடந்த வாசிப்பு அனுபவப்பகிர்வு நிகழ்ச்சியில், நடேசனின் **தாத்தாவின் வீடு** (நாவல்) பற்றி ரஞ்சகுமாரும், தேவகி கருணாகரனின் **அவள் ஒரு பூங்கொத்து** (சிறுகதைத் தொகுதி) பற்றி சௌந்தரி கணேசனும் முருகபூபதியின் **சினிமா: பார்த்ததும் கேட்டதும்** (கட்டுரை) நூல் பற்றி கிறிஸ்டி நல்லரெத்தினமும் ஐங்கரன் விக்னேஸ்வரா தொகுத்திருக்கும் **இலங்கை இதழியலில் சிவகுருநாதன்** (கட்டுரை) நூல் பற்றி ம. தனபாலசிங்கமும், கலாநிதி சந்திரிக்கா சுப்பிரமணியனின் **பெண் நூறு** (கட்டுரை) பற்றி இந்துமதி சிறீனிவாசனும் தத்தமது வாசிப்பு அனுபவங்களை சமர்ப்பித்து உரையாற்றினர்.

மதிய உணவு இடைவேளையைத் தொடர்ந்து **மலையகம் 200** என்ற தொனிப்பொருளில் நடந்த கருத்தரங்கிற்கு குவின்ஸ்லாந்து மாநிலம் கோல்ட் கோஸ்டிலிருந்து வருகை தந்திருந்த மருத்துவ கலாநிதி வாசுகி சித்திரசேனன் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியை கானா. பிரபா தொகுத்து வழங்கினார். இலங்கையிலிருந்து, எழுத்தாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மல்லியப்பு திலகர் காணொளி வாயிலாக உரையாற்றினார்.

மலையகம் 200 ஐ முன்னிட்டு இலங்கையில் நடந்த நெடும்பயணமும் காணொளிக்காட்சியாக காண்பிக்கப்பட்டது.

கலாநிதி சந்திரிக்கா சுப்பிரமணியன், மலையகத்தின் அரசியல், சமூக பொருளாதார, கலை, இலக்கிய வளர்ச்சி மற்றும் விழிப்புணர்வு தொடர்பாக வீரகேசரி பத்திரிகையின் வகிபாகம் என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

இவ்விழாவின் இதர அரங்குகளில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட ஸ்ரெத்ஃபீல்ட் மாநகர மேயர் திருமதி கரன் பென்சபென், துணை மேயர் திருமதி சண்டி ரெட்டி மற்றும் பரமட்டா மாநகர மேயர் திரு. சமீர் பாண்டே ஆகியோர் உரையாற்றியதுடன் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற குழந்தைகளுக்கும், எழுத்தாற்றல்மிக்க மாணவர்களுக்கும் சான்றிதழ்களையும் வழங்கினர்.

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் (2023 –2024) நிருவாகிகள்.

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் (**Australian Tamil Literary and Arts Society – ATLAS**) வருடாந்த பொது க்கூட்டம் கடந்த ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை மெய்நிகரில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் திருமதி சகுந்தலா கணநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், செயலாளர் டொக்டர் நடேசன் ஆண்டறிக்கையையும் துணை நிதிச்செயலாளர் திரு. லெ. முருகபூபதி நிதியறிக்கையையும் சமர்ப்பித்தனர்.

2023 – 2024 ஆம் ஆண்டுகளுக்கான நிருவாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர் : கவிஞர் இ. அம்பிகைபாகர்.

தலைவர்: திரு. கிறிஸ்டி நல்லரெத்தினம்.

துணைத்தலைவர்கள் :

சட்டத்தரணி (திருமதி) மரியம் நளிமுடீன்.

திரு. ஐங்கரன் விக்னேஸ்வரா.

செயலாளர்: திரு. லெ. முருகபூபதி

துணைச்செயலாளர்: டொக்டர் நடேசன்.

நிதிச்செயலாளர்: திருமதி சிவமலர் சபேசன்.

துணை நிதிச்செயலாளர் : திருமதி தேவகி கருணாகரன்.

செயற்குழு உறுப்பினர்கள்:

திருமதி சகுந்தலா கணநாதன்.

சட்டத்தரணி – திரு. பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா

கலாநிதி ஸ்ரீ கௌரிசங்கர்.

திரு. இப்ரகீம் ரஃபீக்.

திருமதி ஆழியாள் மதுபாஷினி ரகுபதி.

திரு. சங்கர சுப்பிரமணியன்.

-----O------

அவுஸ்திரேலியா குவின்ஸ்லாந்து மாநிலத்தில் வதியும் எழுத்தாளர் தாமரைச்செல்வியின் அரை நூற்றாண்டு கால இலக்கியப் பணியை பாராட்டி கனடாவிலிருந்து வெளியாகும் தாய்வீடு மாத இதழ் சிறப்பிதழ் வெளியிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் வெளியாகியிருக்கும் **தாய்வீடு** சிறப்பிதழில் இதர ஆக்கங்களுடன், தாமரைச்செல்வியின் எழுத்துலகம் குறித்த கட்டுரைகளின் விசேட இணைப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

தாமரைச்செல்வியின் வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் ஆக்கங்களை எழுத்தாளர்கள் சி. கருணாகரன், லெ. முருகபூபதி, யசோதா பத்மநாதன், சார்ள்ஸ் குணநாயகம், ரஞ்ஜனி சுப்பிரமணியம், தமிழக படைப்பாளி இந்திரன், சந்திரா இரவீந்திரன், ஆகியோர் எழுதியிருக்கின்றனர்.

தாமரைச்செல்வியுடனான நேர்காணலை சேகர் தம்பிராஜா எழுதியுள்ளார். ஓவியராகவும் திகழும் தாமரைச்செல்வியின் சில ஓவியங்களும் இச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் கடந்த காலங்களில் தாமரைச்செல்வியை பாராட்டி அட்டைப்பட அதியாக அவரை கௌரவித்த இலக்கிய இதழ்களின் முகப்புகளும் வெளிவந்துள்ளன.

கடந்த செப்டெம்பர் மாதம், அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கமும் தனது 23 ஆவது தமிழ் எழுத்தாளர் விழாவில் தாமரைச்செல்விக்கு இலக்கிய சாதனையாளர் விருது வழங்கி பாராட்டியது என்பதும் குறிப்பிடத்தக்கது. புகைப்படங்கள் அடுத்த பக்கத்தில்.

இணைப்பு : www.thaiveedu.com

சிறுகதை

காஃபி ஷாப்

கனகா கணேஷ்

இரயிலை விட்டு இறங்கி வேகமாக நடந்தால் மூன்று நிமிடங்களில் வீட்டை அடைந்துவிடலாம். இரண்டு அடி எடுத்து வைப்பதற்குள் அங்கொன்றும் இங்கொன்றுமாக தூறலாக விழுந்த மழைத்துளி சடசடவென்று பெருமழையாக உருவெடுத்தது.

இந்த மழையில் நடப்பதைவிட ஓரமாக நின்றுவிட்டு மழை விட்டதும் போகலாம் என சுவரோரமாக ஒதுங்கினேன்.

தமிழர்கள் பெருமளவில் செறிந்து வாழும் இந்தப்பகுதியில்தான் கடந்த ஏழு வருடங்களாக வசித்து வருகிறேன். வீதியின் இருபக்கங்களிலும் சுமார் ஐநூறு மீட்டர் அளவில் தமிழ் கடைகள் மட்டும்தான்.

மீன் கடை இறைச்சிக் கடை முதல் துணிக் கடை, நகைக்கடை, பூக்கடை, பழக்கடை முக்கியமாக டேக் அவே என சொல்லப்படும் ஏராளமான சாப்பாட்டு கடைகள் என்று இங்கு இல்லாத கடைகளே இல்லை என்று சொல்லலாம். சுருக்கமாக சொல்வதென்றால் சிட்னி வாழ் தமிழர்களின் சொர்க்கபுரியே இந்தத் தெரு தான். வேறு விதமாக சொல்வதென்றால், உதாரணத்திற்கு உங்கள் நண்பர் ஒருவர் சிட்னியில் இருக்கிறார், ஆனால் அவரது விலாசம் உங்களுக்கு தெரியாது என்று வைத்துக் கொள்வோம். அவரை கண்டுபிடிக்க வேண்டுமென்றால் நீங்கள் அதிகம் மெனக்கெடத் தேவையில்லை. இரண்டொரு நாட்கள் இந்த பகுதியில் சுற்றிக் கொண்டிருந்தாலே போதும், நிச்சயம் உங்கள் கண்ணில் அவர் அகப்பட்டு விடுவார். அந்தளவிற்கு ஒவ்வொருவரின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் அத்தனை கடைகளும் இந்தப் பகுதியில் ஒருங்கே அமைந்திருந்தது இந்த இடத்தின் சிறப்பு.

நான் நின்றிருந்த இடத்தைச் சுற்றி ஒரு முறை நோட்டம் விட்டேன். என்னவென்று இனம் பிரிக்க முடியாதபடி எல்லாம் சேர்ந்த கலவையான மணம் தெருவெங்கும் விரவிக்கிடந்தது. அதனை நுகர்ந்தபடி தமிழில் சத்தமாக பேசிக்கொண்டு சாலையின் இருபக்கம் மட்டுமல்லாது, சாலை விதிகளை கொஞ்சம் கூடபொருட்படுத்தாமல் குறுக்கிலும் நெடுக்கிலுமாக நம் மக்கள் கூட்டம் கூட்டமாக நடந்து

கொண்டிருந்தனர். இது ஆஸ்திரேலியா தானா என்று நம்ப முடியா வண்ணம் இந்தியர் இலங்கையர் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதியாக அது மாறி விட்டதாக எனக்குத் தோன்றியது.

நான் நின்றுகொண்டிருக்கும் இடத்திற்கு நேர் எதிரில்தான் புதிதாக அந்த காஃபி ஷாப் முளைத்திருந்தது. நம்ம ஊர்க்காரரர் ஒருவர்தான் அதை நடத்தி வருகிறார்.

அந்தப் பகுதியில் இருந்த எல்லா கடைகளுமே ஊர் கடைகள் போல மிக சாதாரணமாக இருக்க, இந்த காஃபி கடை மட்டும் கொஞ்சம் வித்தியாசமாக அந்த இடத்திற்கு கொஞ்சமும் பொருந்தாமல் ஆங்கில ஸ்டைலில் கம்பீரமாக காட்சியளித்தது. அதன் உரிமையாளர் கூட மிக நேர்த்தியாக உடையணிந்து பார்ப்பதற்கு படு ஸ்டைலாக இருப்பார்.

நான் வெளியில் போகும் சமயங்களில் எல்லாம் அவர் முகத்தில் விழிக்காமல் அவரைக் கடக்கவே முடியாது. அப்பொழுதெல்லாம் ஒரு சிறு புன்னகை. ஒரு ஹலோ பரிமாறிக்கொள்வோம்.

கடை என்னவோ எப்போதும் வெறிச்சோடித் தான் இருக்கும் என்றாலும் அவர் மட்டும்சுறுசுறுப்பாக பரபரப்புடன் ஓடியாடி சுற்றி சுழன்று கொண்டிருப்பார். அவரைப் பார்த்து, ஆளே இல்லாத கடையில் யாருக்கு ஆத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று கூட பலமுறைக் கேட்க நினைத்திருக்கிறேன்.

அவர் இப்படி தினமும் ஈஓட்டிக்கொண்டிருப்பதைக் காண சகிக்காமல் , நான் கூட ஒரு நாள் காஃபி குடித்து வரலாம் என்று உள்ளே நுழைந்தேன். ஒரு பெரிய அட்டையைக் கொடுத்தார். மெனு கார்டாம். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. குத்துமதிப்பாக ஏதோ ஒன்றை சுட்டிக் காட்டி ஆர்டர் செய்தேன். தன்னந்தனியாக நான் மட்டுமே கடையில் இருந்தது என்னவோ போலிருந்தது. என்னைப் பார்த்து நானே பயப்பட்டேன்.

மெதுவாக அவரிடம் பேச ஆரம்பித்தேன். சில வினாடிகளில் சமீபத்தில்தான் அவர் ஐரோப்பா கண்டத்திலிருந்து இங்கு வந்து குடியேறியவர் என்பதை அறிந்து கொண்டேன். பேச்சு வாக்கில், வெறும் காஃபி மட்டும் வைத்திருக்கிறீர்களே, கூடுதலாக, ரொட்டி, பிஸ்கெட், வடை , கேக் என்று சில சிற்றுண்டி வகைகளையும் சேர்த்து வைத்துக் கொண்டால் கடைக்கு வருபவர்களின் எண்ணிக்கை சற்று அதிகரிக்குமே என்று இலவசமாக ஒரு ஆலோசனையையும் சொன்னேன்.

மனிதர் கொதித்துப் போயிருக்க வேண்டும். நாகரீகம் கருதி அவர் அதைக்காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் வெகு அலட்சியமாக, சற்று அலட்டலுடன், “இது நீங்கள் நினைக்கின்ற மாதிரி சாதாரண காஃபி கடை இல்லை. பாரிஸ்டா (Barista) வைத்து முறையாக, தரமான முறையில் காஃபிக் கென்றே பிரத்யேகமாக பயிற்சி எடுத்து நடத்திக்கொண்டிருக்கும் கடை” என்று சொன்னார். சுவைத்துப் பார்த்ததில் எனக்கென்னவோ நான் போடுகின்ற காஃபி யை விட படு மட்டமாக இருப்பதாகவே தோன்றியது. நம்மவர்கள் மெட்ராஸ் பில்டர் காபி, மசாலா டீ, சுக்கு, மல்லி , ஏலக்காய் சேர்த்த பாரம்பரிய காஃபி என்று சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்க இந்த கசந்து போன பாரிஸ்டா காஃபி குடிக்கின்ற அளவிற்கு நம் மக்கள் எப்போது மேம்படுவது, இவர்

எப்போது கல்லா கட்டுவது என்ற யோசனையுடனே வெளியில் வந்து விட்டேன்.

உண்மையில் அந்த இடத்தில் காஃபி ஷாப்க்கு பதிலாக ஒரு பெரிய கொதிகலனுடன் வெட்ட வெளியில் இரண்டு மர பெஞ்சுகள் கொஞ்சம்



செய்தி தாள்கள் என்பது போன்ற அமைப்புடன் ஒரு சாதாரண டீக்கடை வைத்திருந்தாலே அந்த இடத்திற்கு பொருத்தமாகவும் இருப்பதோடு வியாபாரமும் அமோகமாக இருந்திருக்கும். நவ நாகரீக மங்கை பட்டிக்காட்டில் குடியேறியது போல் இந்த இடத்தில் காஃபி ஷாப் காற்று வாங்கி கொண்டிருக்கிறதை நினைத்து கவலைப்பட்டேன்.

அந்த சம்பவத்துக்கு பிறகுகூட தினமும் அந்த வழியாகத்தான் வந்து போய்கொண்டிருக்கிறேன். ஆனாலும் பெரும்பாலும் அவரை பார்க்க கிடைத்ததில்லை. ஓரிரு சமயங்களில் காணக் கிடைத்தாலும் என்னைத் தவிர்க்க, வேண்டுமென்றே அவர்

மாயமாகி விடுவது போல எனக்குள் ஒரு நெருடல். ஒருவேளை நான் அவ்வாறு சொன்னது பிழையோ , அவரைக் காயப்படுத்தி விட்டோமோ... தெரியாமல் செய்து விட்ட என் சிறுபிள்ளைத்தனத்தை நினைத்து வருந்தினேன்.

இன்று இந்த மழைத்தூறலுக்கு இதமாக பாரிஸ்டா காபி குடிக்க வேண்டும் போல் தோன்ற, அந்த சாட்டில் நேரடியாக போய் அவரை சமாதானப் படுத்தினால் என்ன,?

எண்ணம் தோன்றியவுடன் கடையை நோக்கி மெதுவாக நடக்கத் தொடங்கினேன். கடையின் உள்ளே கண்ணாடி கதவிற்கு பின்னே அவர் நிற்பது தெரிந்தது. சிறு புன்னகையை வலிந்து வரவழைத்தபடி கடைக்குள் நுழைய எத்தனிக்கையில் கண்ணில் ஏதோ நெருட எதேச்சையாக என் பார்வை பதிந்த இடத்தில் இருந்தது அந்த விளம்பர பலகை.

ரொட்டி, ரோல்ஸ், வடை மற்றும் கட்லெட்ஸ் ஆகியவற்றின் வண்ணப்படங்களுடன் "இங்கு சிற்றுண்டிகளும் கிடைக்கும்" என்று தமிழில் பொருள்படுமாறு அச்சிடப்பட்டிருந்த ஆங்கில வாசகமும் அதனைத் தொடர்ந்து மல்லி, சுக்கு, ஏலக்காய், இஞ்சி சேர்த்து பாரம்பரிய சுவையில் காஃபி,தேநீர் தயாரித்துதரப்படும் என்ற வாசகமும்...

U3A

U3A என்பது என்ன?

University of Third Age என்பதன் சுருக்கமே U3A. 1972ல் பிரான்ஸில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு இன்று உலகெங்கும் கிளைபரப்பி செழித்தோங்கி வளர்ந்துள்ளது. Third Age என்பது 50 வயதுக்கு மேற்பட்ட ஓய்வு பெற்ற மூத்த பிரஜைகளை குறிப்பதாகும். இவர்களை ஒரு உற்சாகமான சூழலில் கற்பித்தல் மூலம் இணைக்கும் இந்த அமைப்பு ஆஸ்திரேலியாவில் முதலில் 1984ம் ஆண்டு மெல்பேர்னில ஆரம்பிக்கப்பட்டது. இதில் இணைவதற்கு $40 மட்டும் ஆண்டு சந்தாவாக செலுத்தினால் போதும். எத்தனை வகுப்புகளுக்கும் சமூகமளிக்க முடியும். ஒரு சந்தோஷமான செய்தி: இங்கு பரீட்சைகள் இல்லை! வகுப்புகள், பாடசாலை விடுமுறையை தவிர்த்து, காலை 9.00 முதல் மாலை 4.00 மணி வரை வாரம் ஐந்து நாளும் நடைபெறுகிறது. யோகா, ஓவியம், கதை எழுதல், வான சாஸ்திரம், கை வேலை, இசை கருவிகள் வாசித்தல், மனித நேயம், இயற்கை அறிவியல், உளவியல் போன்ற தலைப்புகளில் வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆஸ்திரேலியாவின் மற்ற மாநிலங்களிலும் கனடா, UK ஆகிய நாடுகளிலும் இந்த அமைப்பு சிறப்பாக இயங்குகிறது.

ஓய்வுபெற்ற பின் வீட்டில் சோர்ந்து இருக்காமல் University of Third Age பற்றி மேலும் அறிந்து பயன்பெற வலைத்தளத்தை தட்டிப்பாருங்கள்!

நேற்று இதே காலை ஏழு மணிக்கு நல்ல சூரிய வெளிச்சம் இருந்தது. தேங்காய்த் துருவலை தூவிவிட்டது போல பனித் தூவல் படிந்திருந்த புல்லில் சப்பாத்துப் பட்டவுடன் கரக், கரக் என்று ஐஸ் உடைந்தது. வெளியில் நின்ற காரை பிளாஸ்டிக் உறையினால் போர்த்து மூடிவிட மறந்து விட்டதனால் விண்ட் ஸ்கிரீனிலிருந்த ஐஸ் பட்டையை கழற்ற தண்ணீர் ஊற்ற வேண்டியிருந்தது.

தோட்டத்து ஹோஸ் பைப்பை இழுத்து வந்து டப்பைத் திருகினேன். தண்ணீர் ஒரு சொட்டும் வெளிவரவில்லை. பைப்பை வளைக்க உள்ளுறைந்திருந்த ஐஸ் முறியும் சத்தம். வீட்டுக்குப் பின் பக்கதிலிருந்து வாளியில் நிரம்பியிருந்த மழைத் தண்ணீரை எடுத்து வந்து ஊற்றலாமென்றால் வாளிக்குள் ஒரு சென்றி மீற்றருக்கு அது ஐஸ் தகடாயிருந்தது. அதைத்தூக்கி கொங்கிறீட் பேவிங்கில் எறிய கண்ணாடி சிதறுவதுபோல சிதறியது.

இன்றைய காலை முற்றிலும் வேறாய் விடிந்திருக்கிறது. ஒரு முப்பது மீற்றருக்கு மேல் எதுவும் தெரியாத பனிப்புகார். தூரத்தே இலை உதிர்த்த மேப்பிள் மரங்கள் தலை கீழாகத் தெரியும் நரம்பு மண்டலமாய் தெரிகின்றன.

பனியில் நனைந்த புல், மஞ்சளும், மண்ணிறமும் இடையிடையே பச்சை தூவின தோற்றமும் கொண்டிருக்கிறது. சூரியன் இன்று வெளித் தெரியவேயில்லை. பதினொரு மணிக்கு மேல் மேக மூட்டம் கலைய வெளி வரக்கூடும். குளிர் எப்போதும் போல பூச்சியத்திற்கு கீழேயே நின்ற ஒரு காலைதான் இதுவும். சிறுவர் பூங்காவுக்கு முன்னாலுள்ள குளத்தில் வாத்துகள் குளிர் நீரில் இறங்கத் தயங்கிய வண்ணம் நின்றன. தண்ணீர் மட்டத்தோடு அசையும் பனிப் புகை அந்தக் குளமே ஒரு சூடான தேநீர்க் கோப்பையாகி, ஆவி பறக்கப் பரிமாறத் தயாராகி நிற்பது போலத் தோற்றம் கொடுத்தது.

எனது நடைபாதையும் சிறுவர் பூங்காவிலிருந்து வரும் நடைபாதையும் குறுக்கறுக்கும் சந்தியை நான் அடைந்தபோது, திடுக்கிடும் படி என்னை நோக்கி திடீர்த் தாக்குதலுக்கு ஓடி வந்த அந்த மண்ணிற நாயைக் கண்டதும் எதிர்பாராப் பயத்தில் ஒரு கணம் விறைத்துப் போனேன்.

பனிப்புகை இல்லாதிருந்தால் கொஞ்ச தூரத்திலாவது கண்டிருந்திருப்பேன். மூஞ்சை கறுத்து செவி நிமிர்ந்திருந்த அது மிக நெருங்கி வந்து விட்டது.

ஊரிலென்றால் அடீக் அடீக் என்று கத்தினால் நாய்களுக்கு விளங்கும். இங்கே எதை சொல்லி கத்தலாம்? அதையெல்லாம் யோசிப்பதற்கு நேரமெங்கே? கல்லெடுத்து எறியலாமென்றால் பிறகு நாயைக் காயப்படுத்தி அதுவும் இங்கே மிருக உரிமை சட்டத்தில் குற்றாமாகிப் போய் விட்டால் என்ன செய்வது?

இந்தப் பதற்றத்தில் நான் பின்னகர எத்தனிக்க, கால் இடறிப் பின்புறமாக விழுந்தேன் நான் விழுந்திருந்த வேளையில் அது என்னைக் கடிக்கவில்லை. ஒரு வேளை அது எதிர்பார்த்திருக்கவில்லையோ? சற்று தள்ளியே உறுமியபடி நின்றது.

அல்லது விழுந்து கிடக்கும் எதிரியைத் தாக்குவதில்லை என்ற யுத்த தர்மத்தைக் கடைப் பிடித்ததா? விழுமுன் கையை கொங்கிறீட் நடைபாதையில் ஊன்றியதால் மணிக்கட்டு வலித்தது இதே நேரம் நாயின் சொந்தக்காரன் நாயை விரட்டியபடி வந்தபடி நாயுடன் எதோ பேசினான். அது எனக்கு அந்நேரத்தில் விளங்கவில்லை. நான் கோபத்தில் அவனை நோக்கி வார்த்தைகள் உளறலாக உதிர்த்ததை அவனும் அறிந்திரான்.

அவன் நிறம் ஒரு சராசரி வெள்ளையனின் நிறத்திலிருந்து மாறுபட்ட ஒரு கலப்பின நிறம் காட்டியது. தலையில் தொப்பி அணிந்த ஒரு ஒரல் முகம். மீசையைத் தாடியுடன் தொட வைத்து சவரம் செய்திருந்தான்.

“ நீ நாயை கட்டிக் கொண்டு வரவேண்டும். இல்லையேல் நான் முறையிட வேண்டியிருக்கும்.” என்பதை மட்டும் உரத்துச் சொன்னேன்.

உண்மையிலேயே யாரிடம் முறையிடுவதென்றும் எனக்குத் தெரியாது. எதுவும் பேசாமல் தலையை குனிந்தபடி நாயை கூட்டிக்கொண்டு கணப் பொழுதில் அவன் பனிப் புகைக்குள் மறைந்து போனான்.

ஒரு சொறி கூட சொல்லத் தெரியாத நாகரீகமற்றவனா? சாதாரணமாக பல நாய்கள் நடைபாதையில் வாலையாட்டியபடி ஓடி வந்து நட்புணர்வுடன் தலையாட்டி விட்டுப் போவது வழக்கம். அவையெல்லாம் கழுத்தில் வளையம் போட்டு வாரினால் கட்டியபடி எஜமானனோ அல்லது எஜமாட்டியோ கையில் இருப்பவைதான்.

ஆனால், இந்தக் கடி நாயை வாரினால் கட்டாமல் கொண்டு வந்த இவனை நாய் வாரினாலேயே அடித்தாலும் தகும். மனப்படபடப்பிலிருந்து ஒருவாறு விடுபட்டு குளத்தை தாண்டி நடந்தேன்.

பஸ் தரிப்பைக் கடந்ததும் எதிரே லாரா நாயுடன் வருவது தெரிந்தது. லாராவிடமாவாவது சொல்லிப் பார்க்கலாம். லாரா வளர்க்கும் லியரி, ஒரு கறுத்த மோல்டீஸ் கலப்பின சடை நாய்.

அது என்னைக் காணும் போதெல்லாம் ஓடி வந்து என் முழங்காலில் தன் முன் கால்களை வைத்து நின்று வாலை ஆட்டி விட்டுப் போவது வழக்கம்.

அவளிடம் நடந்ததை சொன்னேன்.

“டாக்குவின் நாயா?“ என்று கேட்டாள் லாரா. “ஒன்றும் பேசாது தலையைக் குனிந்தபடி போயிருப்பானே?“ அடுத்த கேள்வியையும் கேட்டாள் .

“ஆம் அவனேதான். ஒரு சொறி கூட சொல்லாமல் ஓடி விட்டான். “ என்றேன்.

“அவன் பிறப்பிலேயே மூளை வளர்ச்சி குறைந்தவன்.“

“உனக்கு எப்படித் தெரியும்?” என்றேன்.

லாரா முன்னரே அவனுடன் பிரச்சினைப்பட்டவள் என்று தெரிந்தது. அவளது கருப்பு லியரியை ஒரு நாள் கடிக்க வந்து அவளும்தான் டாக்குவிடம் சண்டை போட்டிருந்தாள்.

டாக்குவின் வீட்டுக்குப் போய் டாக்குவின் தாயிடம் முன்னரே முறையிட்டிருக்கிறாள். “சரி இன்று போய் இன்னொரு முறை முறையிடுவோம் வா.” என்றாள் லாரா.

லாராவும் நானும் லியரியுடன் அவன் வீட்டுக்கு நடந்தோம். கடைக்கு முன்னெதிரேயுள்ள அந்த தெருவின் கடைசியிலுள்ள வீடுதான் டாக்குவினுடையது.

வீட்டுக்கு வெளியே பலகாலம் வெட்டப்படாத புல் தரையில் முன் வளவெங்கும் பல ரகமான பொருட்கள் ஒரு உடைந்த விமானத்தின் சிதிலங்கள்போல பரவலாக எறியப் பட்டிருந்தன. பெரிய, பழைய கம் மரமொன்று கொப்பு விரித்து கூரை வரை தொடுமாற் போல் நின்றது. வெளியே ஒருத்தி தலையை மூடிய குளிர்த் தொப்பி போட்டபடி பிளாஸ்டிக் கதிரையொன்றிலிருந்து புகைத்துக் கொண்டிருந்தாள்.

அவள் பேசவில்லை. சிரிக்கவுமில்லை. அது டாக்குவின் தாய்தான் என்று அறிந்து கொள்ள அதிக நேரமெடுக்கவில்லை. டாக்குவும், நாயும் இன்னும் வராததை உறுதி செய்து கொண்டு கிட்டப் போனோம். என்னை லாரா அவளுக்கு அறிமுகப் படுத்தி நடந்ததைச் சொன்னாள்.

“அவனுக்கு நாய்தான் பாதுகாப்பு. ஆனால் என்ன செய்வது முட்டாள்தனமாக அவ்வப்போது வாரினை அவிழ்த்து விடுகிறான்.”

“அப்போ, எங்களுக்கு என்ன பாதுகாப்பு?” என்று இடைமறித்துக் கேட்டேன்.

“உண்மைதான். அவனை மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்காக இன்னொரு முறை மன்னித்துக் கொள்ளுங்கள். இனி இப்படி நடக்காது.”

“எப்படி உறுதியாகச் சொல்லுகிறீர்கள்?”

“டாக்குவும் நானும்தான் நாளை காலையே இங்கிருந்து வட கரைக்குப் போய் விடுவோமே. நாயும்தான்.” என்று சொல்லி சிரித்தாள்.

சொண்டு தடித்த அவள் சிரிப்பு சற்று விகாரமாயிருந்தது. அவள் நிறம் தனி வெள்ளையல்ல. கருப்பு நிறம் சற்றுக் குழைத்து கலந்து விட்ட வெள்ளை நிற சருமம்.

டாக்குவின் தாய் சிகரட்டை புல்லில் எறிந்து விட்டுப் பேசத் தொடங்கினாள்.“டாக்குவின் தந்தை ஆதிகுடிகளின் மூரி இனக் குழுவை……..O… சேர்ந்தவன். அவர்கள். எனது தாய் வழி மூதாதையருக்கு உறவு கொண்டிருந்ததால் நான் டாக்குவின் தந்தையை மணந்தேன். டாக்கு பிறந்த போது வலிப்பு வந்ததனால் எற்பட்டதே மூளை பாதிப்பு. அப்போது வலிப்பு வராமல் தடுப்பூசிகள் போடப்பட்டு வந்தாலும் டாக்குவின் தந்தையின் கவனக்குறைவினாலும் எப்போதும் குடித்தபடியும், புகைத்தபடியும் அலைந்து திரிந்து குடும்பத்தை முற்றாகவே கை விட்டுப்போய் சேர்ந்து விட்டான். டாக்கு இரு விதத்தில் பாதிக்கப்பட்டவன். மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான நிலையத்தில் டாக்கு பதினேழு வயதாயிருக்கும் போது இவனுடன் ஒரினப் பாலுறவு கொள்ள முற்பட்ட பாதுகாப்பு ஊழியனினால் மீண்டுமொருமுறை மனப் பாதிப்பிற்குள்ளானான். பாதுகாப்பு ஊழியன் மீது வழக்கும் பதிவானது. ஆனால் குற்றவாளி ஒளித்து விட்டதால் வழக்கு பல ஆண்டுகள் நிலுவையில் இருந்தது. நானும் டாக்குவுக்கு ஒரு மாறுதலான சூழலை கொடுக்க விரும்பியே இருபத்தி ஏழு வயதாகும் அவனை இங்கே கூட்டி வந்தேன். ஆனால் போன வாரம்தான் குற்றவாளியை கைது செய்து விட்டதாயும் விசாரணைக்காக எங்களை வருமாறும் நீதி மன்றம் கடிதம் அனுப்பியிருந்தது.”

நீண்ட இந்த பத்தாண்டுக்கு கதையை பத்து நிமிடங்களில் சொல்லி முடித்தாள் டாக்குவின் தாய். இடையில் இன்னொரு சிகரெட்டும் புகைத்திருந்தாள்.

டாக்குவின் தாயிடம் விடை பெற்று வந்து விட்டோம். இதெல்லாம் நிகழ்ந்து இப்போது மாதங்கள் சில கடந்து விட்டன. அந்த நடை பாதையில் டாக்குவையும், நாயையும் பிறகு நான் காணாததால் என்

மனத்திரையினின்று முற்றாக அவர்கள் மறைந்து போய் விட்டனர். ஆனாலும் இடையிடையே அந்த நினைவை கிளறி விட வல்லதாய் இன்னும் ஒன்று என்னிடம் எஞ்சியிருக்கிறது.

அதுதான் என் மணிக்கட்டில் இடைக்கிடை ஏற்படும் வலி!

……………..O……………..

இலங்கையிலே நாவலபிட்டியாவின் புறநகரில் ஒரு சிறுகுடிலில் அண்ணன், இரண்டு தங்கைகள் மற்றும் தாய் பிரேமாவதியுடனும் வாழ்ந்து வந்தான் கிரிபண்டா. அவன் தந்தையைக் கண்டதேயில்லை.

அம்மா கொடுக்கிற அரை வயிற்று உணவுடன் பள்ளிக்கூடம் போவான் கிரிபண்டா. பசி வயிற்றைக்கிள்ள, அவனால் படிப்பில் கவனம் செலுத்தமுடிவதில்லை. பள்ளிக்கூடம் போகிறேன் எனத் தாயிடம் கூறிவிட்டு பாதி நாட்கள் ஊர் சுற்றுவான். காலப்போக்கில் டவுனுக்குப் போய் அவனிலும் வயது கூடிய கெட்ட இளைஞர்களுடைய சகவாசத்தால் கடைகளுக்குள் புகுந்து பொருட்களை திருடி ஏதாவது வாங்கிச் சாப்பிடுவான். இந்த சில்லறைக் களவுகளுக்கு அகப்படாமல் தப்பி வந்தவன் பெரிய களவுகளுக்கும் துணிந்து விட்டான்.

ஒரு நாள், ஒரு பெண்ணின் கைப்பையை பறித்துக் கொண்டு ஓடினான். ஆனால் பொலீஸ்காரனிடம் அகப்பட்டு இளையோர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான். நீதிபதி கிரிபண்டாவை சிறார் தடுப்பு மையத்தில் ஆறுமாதக் காவலில் வைக்க வேண்டும் எனத் தீர்ப்பளித்தார். தாயும் மகனும் ஒருவரை ஒருவர் அணைத்து, கண்களில் நீர் வழியப் பிரிந்தனர். அதன்பின் மையத்தில் இருக்கும்வரை அவனைத் தாய் பார்க்க வரவேயில்லை.

தடுப்பு மையத்தில் உளவியல் நிபுணர் கிரிபண்டாவை சோதித்து கிரிபண்டாவின் மனதில் மோசமான எண்ணங்கள் இல்லை என்றும்பசிக்கொடுமையாலும், கெட்ட சகவாசத்தாலும் இந்தக் களவுகளைச் செய்திருக்கிறான். ஆகையால் இளைஞர் தடுப்பு மையத்தில் கல்வித்துறை நடாத்தும் கல்வி மற்றும் பயிற்சி துணையலகுகளில் அவன் வயதுக்கும்

அறிவுக்கும் ஏற்ற கல்வியை அளிக்கும்படி பரிந்துரைத்திருந்தார். மையத்தில் வயிறும் மனமும் நிறைய, அவன் படிப்பில் கவனம் செலுத்தத்

தொடங்கினான். பக்கத்து விகாரையிலிருந்து புத்தபிக்கு கல்கமுவ குணசேன தேரோ ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் மையத்திலிருந்த இளைஞருக்குப் புத்த சமய நீதி, மற்றும் தார்மீக நெறிமுறைகள் பற்றியும் நல் ஒழுக்கம் பற்றியும் போதிப்பார். கிரிபண்டா, தேரோவின போதனைகளைக் கிரகித்து விளக்கங்கள் கேட்பான். இது குணசேனா தேரோவை கவர்ந்தது.

ஆறுமாதத்தில் கிரிபண்டா விடுதலையானான். தன்னை அழைத்துப்போக தாய் வருவாள் என ஆவலோடு காத்திருந்தான், ஆனால் அவள் வரவேயில்லை, குணசேனா தேரோ தான் வந்தார்.

”கிரிபண்டா! என்னுடைய விகாரையின் துறவிப் பள்ளியில் சேர்ந்து பணி செய்ய விருப்பமா?'' எனக் கேட்டார்.

”புதுஹமுதுருவோ! நான் உங்களுடைய சீடானாகவே வருகிறேன்” என அவர் காலடியில் விழுந்து வணங்கினான். தேரோவும், தான் கிரிபண்டாவை பொறுப்பெடுப்பதாகக் கையொப்பம் வைத்து அவனை அழைத்துச் சென்றார்.

துறவிப்பள்ளி மாணவர்களோடு வெள்ளை நிற சாரமும் மேற் சட்டையும் அணிந்து கிரிபண்டா விகாரையக் சுத்தமாக வைத்திருப்பது முதற்கொண்டு மற்றும் கடமைகளிலும் ஈடுபடுவான். காலை நான்கு மணிக்கு எழுந்து குளித்துவிட்டு பிக்குகளுடன் தியானம் செய்வான், பின்பு ஒரு மணித்தியாலம் பிரித் (வேதம்) ஓதுவான். ஆறு மணிக்கு

வெறுங்காலுடன் அன்னதான கிண்ணத்தை ஏந்தியபடி சென்று, சுற்றுவட்டாரங்களில் உள்ள மக்கள் தானமாகக் கொடுக்கும் உணவை உண்டுவிட்டு, ‘பிரிவீனா’ பள்ளிக்கூடத்திற்குப் போவான்.

அவனது பதினேழாவது வயதில், தலைமுடியை மொட்டையடித்து எளிமையையும் பற்றின்மையையும் குறிக்கும் காவி வஸ்த்திரம் அணிந்து, பதவி ஏற்பு வைபவத்தில், 'நாவலபிட்டிய ஆனந்தா தேரோ' என்னும் பெயருடன் பிக்குவாக நியமனமானார்.

விகாரையில் நல்ல மதிப்பும், பிரிவீனாவில் கெட்டிக்காரன் என்ற பெயரும் ஆனந்தா தேரோவுக்குக் கிடைத்தது. பிரிவீனாவின் உயர்தரப் பரீட்சையில் தேறி பேராதெனிய பல்கலைக்கழகத்தில், பிக்குகளுக்கான ‘சங்கராமய' விடுதியில் தங்கி சமஸ்கிருதம், புத்தசமயம், தத்துவம், சரித்திரம் முதலிய பாடங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். பட்டம் பெற்றதும், ஸ்ரீ ஜயவார்த்தனாபுர பல்கலைக்கழகத்தில் புத்த சமய, சரித்திர விரிவுரையாளராக நியமனமானார்.

புத்தர் வகுத்த 'விநாய' விதிப்படி, முற்றும் துறந்த ஆனந்த தேரோ தனது ஏழைக் குடும்பத்தை ஆதரிக்கலாம். ஆகையால், தன் முதல் மாசம்பளத்துடன், எட்டு வருடத்திற்குப் பின் தாயையும் சகோதரிகளையும் பார்க்கப் போனான். மெலிந்து, கறுத்து, கிழிந்த சேலையுடன் இருந்த தாயைப் பார்த்து தன் அம்மாவோ என ஐயப்பட்டான். அவர் காலில் விழுந்து, ”அம்மே! என்னை ஆசீர்வதியுங்கள். என் முதல் மாத சம்பளத்தை உங்களிடம் கொடுக்கிறேன் இனியும் என் சம்பளம் உங்களுக்குத்தான். நான் முற்றும் துறந்தவன். என் வாழ்க்கை தொண்டு செய்வதும் பல்கலைக்கழகமும் தான்.'' என்றான். இரு தங்கைகளும், ”புது ஹாமுதுருவோ! எங்களை ஆசீர்வதியுங்கள்!'' என அவர் காலில் விழுந்தனர்.

“நீங்கள் நல்லா படிக்கவேணும். இனிமேல் அரைவயிற்று உணவோடு

பள்ளிக்கூடம் போக வேண்டியதில்லை." என்றான்.

"எங்களோடு தங்கலாமே?" என தாய் கேட்க, "இல்லை அம்மே, எனது வாழுமிடம் புத்த ஆச்சிரமம் தான். நான் வருகிறேன்," எனப் புறப்பட்டான்.

போகும் வழியில் அடுத்த தெருவிற்குள் எச்சரிக்கைச் சங்கொலியுடன் காவல்துறை வாகனங்கள் விரைவதைக் கண்டான். அவன் பிறந்து ஓடி விளையாடிய ஊராயிற்றே! என்ன? ஏது? என அறிய அங்குப் போனார். தேரோவைக் கண்டதும் காவல்துறை அதிகாரி வாகனத்தை விட்டிறங்கி, கைகளைச் சேர்த்து உடம்பை வளைத்து வணங்கினான்.

"என்ன நடந்தது?" என விசாரித்தார். "புதுஹாமுதுருவோ! அதோ அந்தப் பள்ளத்தில் 14 வயது மதிப்பான ஒருவரின் எலும்புக்கூடு கிடைத்திருக்கிறது. மகன் பியதாசாவைக் காணவில்லை எனப் பெற்றோர் எட்டு வருசத்துக்கு முன் காவல் துறையில் எப்படி இறந்திருப்பான் என்று ஏதாவது தடயங்கள் கிடைக்குமா எனப் பார்க்க வந்திருக்கிறோம்," என்றான்.

'பியதாசாவா? எட்டு வருடங்களுக்கு முன் இந்தத் தெருவிலே தானே அவனோடும் வேறு சில பையன்களோடும் விளையாடுவேன். ஒரு நாள் மல்லுக்கட்டி சண்டை பிடித்த போது தானே பியதாசா இந்தப் பள்ளத்துக்குள் விழுந்தான். "பண்டா! பண்டா!" என பியதாசா பரிதாபமாகக் கத்தக் கத்த, காது கேட்காதவன் போல் டவுன் பக்கம் போய், பாக்கைத் திருடி போலீசில் மாட்டிக் கொண்டேன்' என குற்றவுணர்வோடு வருந்தினார் ஆனந்த தேரோ. கிரிபண்டாவாகவிருந்தால், பியதாசாவின் மரணத்திற்கு, தான் பொறுப்பில்லை என தோளை குலுக்கிவிட்டுப் போயிருப்பான். ஆனால் இப்போது ஆனந்த தேரோ அல்லவா! மனச்சாட்சி அவரை உறுத்தியது.

நேரே காவல்துறைக்கு சென்று நடந்த சம்பவத்தைக் கூறி, "அன்று நான் பியதாசாவுக்கு உதவியிருந்தால், அவன் இன்னும் உயிரோடு இருந்திருப்பான்," எனச் சரணடைந்தார்.

'இரக்கம் இல்லாமையும், உன்னத எட்டுவகைப் பாதையில் ஒன்றான சரியான நடத்தையை அனுஷ்டிக்கவும் நான் தவறிவிட்டேன்.

புத்தம் சரணம் கச்சாமி!

தர்மம் சரணம் கச்சாமி!

சங்கம் சரணம் கச்சாமி!'

நன்றி: "விடியல்" சஞ்சிகை இதழ் இந்தியா - டிசம்பர் 2021

“பகலில் அக்கம் பக்கம் பார்த்து கதை, இரவில் அதுவும் கதைக்காதே. “

எங்கள் ஊரில் இருந்த ஆச்சிகள், தாத்தாக்கள் நாங்கள் சிறுவர்களாக இருந்த போது அடிக்கடி சொல்லும் விடயம் இது. அதுக்குச் சொல்லும் காரணம்: இரவில் பேய்கள் நாங்கள் கதைப்பதைக் கேட்குமாம்.

அதனால் “சத்தம் போட்டுக் கதைக்காதே” என்பார்கள். நாங்கள் நம்ப மறுத்தால் ஒரு பேய்க்கதை சொல்வார்கள்.

எங்கள் ஊரில் பல தோட்டங்கள் இருக்கிறது. அவை ஒவொன்றுக்கும் ஒவ்வொரு பெயர் இருக்கும். அதில் ஒரு தோட்டத்தினை பேய்க் கிணத்தடி என்று அழைப்பார்கள். ஆச்சி பேய் கிணத்தடியைப் பற்றி சொன்ன கதை இது. அப்போது நீர் இறைப்பு இயந்திரம் இல்லாத காலம், பட்டை யால் துலா மிதித்து பயிர்களுக்குத் தண்ணீர் இறைத்த காலம். கூட்டுச் செய்கை என இரண்டு மூன்று ஆட்கள் சேர்ந்து தோட்டம் செய்த காலம்.

அந்தக் காலத்தில் ஊரில் நேரம் அறிவதற்கு மணிக்கூடுகள் கிடைக்காது, சேவல்கள்தான் அலாரம். ஒரு நாள் இரவு ஒரு தோட்டக்காரர் தனது நண்பர்கள் இருவரிடம் “ முதல் சேவல் கூவியதும் வந்து விசில் அடித்து என்னை எழுப்பவும் “ எனச் சொல்லி விட்டு படுக்கப் போய்விட்டார்.

அவர் நல்ல நித்திரையில் இருந்தபோது ஒரு விசில் அடித்துக் கேட்டுது, திடுக்கிட்டு எழுந்த போது, “முதல் சேவல் கூவிட்டுது, சுறுக்கா வா!” என்றது ஒரு குரல். நண்பரின் குரல் சற்று வித்தியாசமாக இருந்தாலும், நித்திரை கலக்கத்தில் அதைக் கவனிக்காது அவசரமாக வெளிக்கிட்டுப் போனார் அவர். அந்த இருவரும் ஓட்டமும் நடையுமாகப் போக, இவரும் பின் தொடந்தார். தோட்டமும் வந்தது, அந்த இருவரும் கிணத்தடிப் பக்கம் போனார்கள். அவர் மிளகாய்க்

கண்டுக்கு தண்ணீர் கட்டப் போனர். கிணத்தடிக்குப் போன இருவரில் ஒருவர் துலாவில் ஏறி துலாமிதித்தார். மற்றவர் துலாக் கொடியில் கட்டப்பட்ட பட்டையால் நீரை அள்ளி வாய்க்காலில் ஊற்றினார். தண்ணீர் வேகமாக வந்து கொண்டிருந்தது.

தோட்டக்காறரால் தண்ணீர் வரும் வேகத்துக்கு தாக்குப் பிடிக்க முடியவில்லை. அவர் கத்திச் சொன்னார்: " தண்ணீர் வேகமாக வருகிறது. மெதுவாக இறையுங்கள் "ஆனால், தண்ணீர் இன்னும் வேகமாக வந்து கொண்டிருந்தது. அவர் மெதுவாக என்று சொல்லச் சொல்ல தண்ணீர் வேகமாக வந்து கொண்டிருந்தது. அப்போதுதான் முதல் சேவல் கூவுகிறது.

பேய்கள்தான் விளையாடுகின்றது என எண்ணிய அவர், மிளகாய் கண்டுக்கு நடுவில் மண்ணவெட்டியை நிமிர்த்திவைத்து , அதற்கு மேல் வேட்டியையும் தலைப்பாகையையும் வைத்து, தான் தோட்டத்தில் நிற்பது போன்ற தோற்றத்தை உருவாக்கி விட்டு கோவணத்துடன் ஒரே ஓட்டமாக வீடு வந்து சேர்தார். அங்கே அவரது நண்பர்கள் இருவரும் அவருக்காக காத்திருந்தார்கள்.

மறுநாள் காலை இந்தப் பேய்க்தை ஊர் முழுவது பரவி சனம் அச்சத்திலிருந்தது. ஆனால், அந்த இரண்டு பேய்களும் இந்தக் கதைகளைக் கேட்டு ஒருத்தரை ஒருத்தர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். இப்போதும் அந்தக் கிணத்தடியை பேய்க் கிணத்தடி என்று தான் அழைப்பார்கள்.
ஆச்சி சொன்ன கதை இவ்வாறிருக்க, இன்னொரு கதையையும் சொல்லிவிடுகின்றேன். நாங்கள் , சிறுவருமில்லாமல் இளைஞருமில்லாமல் இரண்டும் கெட்டான் நிலையில் இருந்த பருவத்தில் , ஒரு நாள் இரவில் ஒரு தோட்டக்காரர் தனது மாட்டுக் கொட்டிலுக்கு புதிதாக கூரை அமைத்துக் கொண்டிருந்தார்.

நீளமான அலம்பல் மரத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட நீண்ட கம்புகளைக் கொண்டு பனை நாரினால் உறுதியாக கட்டி முடிக்கும் போது, நடுச் சாமம் ஆகிவிட்டது.

அவருக்கு அசதியாக இருந்தாலும், தன்னால் கட்டி முடிக்கப்பட்ட குடிலின் கூரை உறுதியாக இருந்ததில் மகிழ்ச்சி.அதை ஒருக்கால் அசைத்துப் பார்த்துவிட்டு , " இதை ஒரு பயலாலும் இனிமேல் அசைக்க முயாது" என தனது நண்பனிடம் சொன்னார்.

அப்போது அவரது வீட்டு ஒழுங்கையால் சில சையிக்கிள்களில் சில பேய்கள் போய்க் கொண்டிருந்தன. விடிய எழும்பிய தோட்டக்காரர், தனது குடிலை திரும்பவும் பார்க்க வந்தார். வந்தவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. குடிலைக் காணவில்லை. குடில் இருந்த இடத்தில் குடில் செய்யப் பயன்படுத்திய கம்புகளும் பனைநார்களும் ஒழுங்காக நேர்த்தியாக அடுக்கிவைக் கப்பட்டிருந்தன.இந்தச் சம்பவத்தைப்பற்றி பேய்க் கதை பரவவில்லை.

மறு நாள் காலையில் எமது நண்பனான பேய் ஒன்று எங்களிடம் நடந்ததைச் சொல்லிச் சிரித்தது. நாங்களும் சிரித்தோம்.

ஆனால், இப்போது நினைத்துப்பார்த்து வருந்துகிறேன்.

---0---

(ஏறத்தாழ 23 வருடங்களுக்கு முன்னர், எழுத்தாளர் லெ.முருகபூபதியின், நூல்களின் வெளியீட்டு அரங்கில் அறிமுகப்படுத்தப்பட்ட "**எங்கள் தேசம்**" நூலுக்கு, சட்டத்தரணி, **பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா** அவர்கள் ஆற்றிய நயவுரை இங்கு தரப்படுகிறது.)

எங்கள் தேசம்! இது நூலின் தலைப்பு. இது ஒரு சிறுகதைத் தொகுப்பு. எல்லாமாகப் பன்னிரெண்டு சிறு கதைகள் இதில் உள்ளன. இவற்றில் முதல் ஆறு சிறுகதைகளைப் பற்றிய எனது அவதானக் குறிப்புகள்.

முதலாவது கதையின் தலைப்பே இந்த நூலின் தலைப்பாக உள்ளது. எங்கள் தேசம் என்ற அந்தக் கதைமட்டுமே எங்கள் தேசத்திலே நடந்ததாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஏனைய ஐந்து கதைகளுக்கும் அவுஸ்திரேலியாவே களமாக அமைந்திருக்கின்றது. இருந்தாலும், எல்லாக் கதைகளிலும், பாத்திரங்கள் – கதைமாந்தர்கள் - விடுகின்ற மூச்சு, எங்கள் தேசத்தின் காற்றாகவே இருக்கின்றது.

எங்கள் தேசம் என்ற முதலாவது கதையிலே, கத்தி ஒன்று காணாமல் போய்விடுகிறது. வீட்டிலே கத்தியொன்று காணாமல் போவதென்பது, விசித்திரமல்ல, சாதாரணமான விடயந்தான். ஆனால், பச்சிளம் குழந்தை ஒன்று, தந்தையைக் கொன்றவர்களைப் பழிவாங்க நினைத்தது, ஒரு கத்தியை எடுத்தது, சரியான வேளை வரட்டும் என்று வேலியிலே மறைத்துவைத்தது என்பது முடிவாக வந்து, ஒரு கதையாக அமைகின்றபோது, முடிவில்லாது தொடர்கின்ற வெஞ்சமரின் விளைவாக, இவ்வாறு, நெஞ்சங்களிலே நஞ்சு விதைக்கப்பட்ட பிஞ்சுக் குழந்தைகள் எத்தனை? நம்பிக்கையற்ற எதிர்காலத்தோடு வெம்பிக்கிடக்கின்ற விதவைகள் எத்தனை?

வீட்டைவிட்டுக் கணவன் வெளியே போவதையே வேதனையாக நினைக்கும்

பருவத்திலே, நாட்டைவிட்டே அனுப்பிவிட்டு ஏக்கப் பெருமூச்சிலே வாழ்க்கையை நடத்துகின்ற இளம்பெண்கள் எத்தனை? என்பதையெல்லாம், வாசகர்களின் இதயங்களிலே, சுமையாக ஏற்றுகிறார், சுவையான நடையிலே, முருகபூபதி.

எங்கள் தேசம் என்ற இந்தக் கதை உண்மையிலேயே ஒரு சிறுகதையா என்ற கேள்வி எனக்குள் எழுகிறது. சிறுகதையின் இலக்கணத்துள் இந்தக்கதை அமையவில்லைப்போல் எனக்குத் தோன்றுகிறது.

காணாமல் போன கத்தி கண்டுபிடிக்கப்பட்டதுடன் ஒரு கதை முற்றுப்பெற்று விடுகிறது. கணவனுக்குத் தேவகி கடிதம் எழுத நினைப்பதும், எழுதி முடிப்பதும் இன்னுமொருகதை!

ஜேமிஸ் ஐயா எனப்படும் சிங்களவரைத் தமிழ்ப் போராளியுடன் தொடர்பு வைத்திருந்தவர் என்ற சந்தேகத்திலே பாதுகாப்புப் படை பிடித்துச் செல்வது மற்றுமொரு கதை!

ஆக, மூன்று சிறுகதைகள், ஒருகதையாக எழுதப்பட்டுள்ளது. சிறுகதை இலக்கணத்தை முருக பூபதி மீறிவிட்டாரே என்று இங்கே நான் சொல்ல வரவில்லை. ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்கின்ற மூன்று விடயங்களை, ஒன்றாகத் தந்திருக்கிறார், என்று சொல்ல விரும்புகிறேன்.

எனவே, சிறுகதையாகக் கொள்ள வழியில்லை. ஆனால் சிறந்த ஒரு கதையாகக் கொள்வதில் தடையில்லை.

இரண்டாவது கதையின் தலைப்பு **இயந்திரங்கள்!**

சொந்த நாட்டில் குடும்பங்களை விட்டுவிட்டு, இந்த நாட்டில் வாழ்கின்ற நான்கு தமிழர்களைப் பற்றியது.

இலட்சியங்களைக் கனவிலே எண்ணிப்பார்த்து, இலட்சங்களை நனவிலே எண்ணிப் பார்த்து, வாழுகின்ற நிலைமை! சொந்தங்களைப் பிரிந்து, சுகங்களை இழந்து, வாழுகின்ற தனிமை!

எந்த நேரமும் ஊரில் உள்ளவர்களுக்கு என்ன நடக்குமோ என்று பயந்து ஏங்கித்

தவித்துக்கொண்டிருக்கின்ற கொடுமை!

இவ்வாறு ஒரு வீட்டில், ஒன்றாக வாழ்கின்ற நான்கு மனிதர்களின் நாளாந்த நினைவுகள், நெஞ்சக் குமுறல்கள், அன்றாடக் கடமைகள், இயலாமையின் கனவுகள்

எல்லாவற்றையும், உள்ளார்ந்த உணர்வுகளோடு நங்கு அனுபவித்து எழுதியிருக்கிறார் முருகபூபதி.

இந்தக் கதையை வாசிக்கும் பலருக்கு, இது தமது சொந்தக் கதைபோலவே இருக்கிறதே என்று நினைக் கத்தோன்றும். அந்த அளவிற்குப் புலம்பெயர்ந்து வாழும் எந்த மனிதருக்கும் பொருந்துவதாக உள்ளது.

மூன்றாவது கதை **நிறங்கள்**!

வெள்ளை இனத்தவருக்கும், கறுப்பு இனத்தவருக்கும் வித்தியாசம் என்பது, வெறும் தோலில் மட்டுமல்ல, உள்ளத்திலும்தான் என்பதைப் தெள்ளத் தெளிவாகப் புலப்படுத்துகின்ற சிறப்பானதொரு கதை.

வெள்ளைக்காரனால் எப்போதும் வெறுத்து ஒதுக்கப்படுகின்ற கறுப்பு இனத்தவன் ஒருவன்,

அந்த வெள்ளைக்காரனுக்கு விபத்து ஏற்பட்டதும், உதவிக்காக ஓடிச் செல்வதும், தோளில் அவனைத் தூக்கிச் செல்வதும், எப்போதும் அவனோடு கூடவே இருக்கின்ற வெள்ளை இனத்தவர்கள், வேடிக்கை பார்த்துக்கொண்டு விலகியே நிற்பதும், கதையாக இருந்தாலும்,

புனைகதையாக இருந்தாலும், வெறும் கற்பனையல்ல என்பதுபோலவே வடித்திருக்கிறார் முருகபூபதி.

ஒருவேளை, இது ஓர் உண்மைச் சம்பவமோ என்றுகூட நினைப்பதற்கு, என்னைத் தூண்டியது.

அடுத்த கதையின் பெயர் **குழந்தை**. அவுஸ்திரேலியாவிலே வாழ்கின்ற, ஓர் இளம் தம்பதி. அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை. அந்தக் குழந்தையின் பெயர் குமரன். குமரனின் நண்பன் ஒரு நாய்க்குட்டி.

நாய்க்குட்டியின் பெயர் ஜக்ஷன். அந்த இளம் தம்பதிகள், தங்களது வதிவிட உரிமைக்கான விண்ணப்பம் சம்பந்தமாக, மருத்துவ சோதனைக்குச் செல்லும்போது, குமரனையும், நாய்க்குட்டியையும் தங்களுடன் கொண்டு செல்கிறார்கள்.

தெருவிலே ஒரு மின் கம்பத்தோடு ஜக்ஷனைக் கட்டி வைத்துவிட்டு, மருத்துவ சோதனைக்குச் செல்கிறார்கள். குமரனை மருத்துவப் பரிசோதனை அறைக்கு வெளியே, தள்ளு வண்டியிலே வைத்துவிட்டு, அவர்கள் உள்ளே செல்கிறார்கள். பரிசோதனை முடிந்ததும் வெளியே வந்து பார்க்கிறார்கள், குமரனைக் காணவில்லை. குழந்தையைக் காணவில்லை என்று அவர்கள் இருவரும் தவியாய்த் தவிக்கிறார்கள். அந்தத் தவிப்பை, அவர்கள் படுகின்ற துயரத்தை, இந்தக் கதையை வாசிப்பவர்களும் படக்கூடியவகையில் முருகபூபதி வெகு இயல்பாக எழுதியிருக்கிறார்.

முருகபூபதிக்கு, தனது மகன் முகுந்தனை, இப்படி எப்போதாவது தொலைத்துவிட்டுத் தேடிய அனுபவம் இருக்கிறதோ தெரியவில்லை. அப்படி நாம் நினைக்கும் அளவுக்கு, அனுபவித்துச் சொல்லியிருக்கிறார். ஓரளவு, கதையின் முடிவை ஊகிக்கக்கூடிய மாதிரியே இருந்தாலும், வீதியிலே கட்டிவைத்திருக்கும் நாய்க்குட்டிக்கு பிஸ்கட் கொடுத்துக்கொண்டிருக்கும் குமரனைக் காணும்வரை, அதாவது பெற்றோருக்கும், வாசகர்களுக்கும் குமரனைக் காட்டும்வரை, கதையை நகர்த்திச் செல்லுகின்ற முறை இருக்கிறதே, அது மிகவும் அருமை!

நாமெல்லாம் சுவைத்துச் சுவத்து வாசிக்கவேண்டுமென்றே, அவர் இரசித்து, இரசித்து எழுதியிருக்கிறார்.

ஐந்தாவது கதை **வேலி!** தனக்கெனத் தன்னைச் சுற்றி ஒரு வேலியைப் போட்டுக்கொண்டு, தன் கலைத்துவத்தை, அந்த வேலிக் குள்ளேயே அஞ்ஞாதவாசத்தில் வைத்திருக்கும் ஒரு வீணைக் கலைஞரின் விரக்தியான மனநிலையைப் பற்றிய கதை!

தந்தை இறந்ததும், பாட்டனார் மறைந்ததும், தன் வீணை வீட்டோடு எரிந்ததும் – அவளை மீளாத சோகத்திற்கு ஆளாக்கிவிடுகின்றன.

நாட்டைவிட்டு, நாடுவந்தும் மனதிலே மாற்றம் வரவே இல்லை. வீணையின் நரம்புகளிலே விரல்களை மேயவிடுவதற்கு, அவளின் கணவனும், சிநேகிதியும் எடுக்கின்ற முயற்சிகள் அற்புதமானவை! அற்புதமானவை என்று ஏன் சொல்கின்றேனென்றால் அவளை மீண்டும் வீணை மீட்ட வைக்கவேண்டும் என்று அவர்கள் எடுக்கின்ற முயற்சிகள்,

அவளது கலைத்திறமையை வளர்க்க வேண்டும் என்பதற்காகவோ, அவளது கலைத்துவத்தை வெளியுலகுக்குக் காட்டவேண்டும் என்பதற்காகவோ மட்டும் அமைவதாக இல்லாமல், அவற்றுக்கும் மேலாக, அவற்றையும் கடந்து, மீண்டும் அவள் வீணையை மீட்டத் தொடங்கிவிட்டால், அவளின் அடிமனத்தின் ஆழமான காயங்கள் ஆறிவிடலாம், அவள் தேறிவிடலாம்,

மீண்டும் பழையவளாக மாறி விடலாம் என்பதற்காகவே, என்கின்ற உணர்வை வாசகர்களுக்குத் தரக்கூடிய விதத்தில் வார்த்தைகள் நகர்கின்றன.

ஆறாவது கதை, **முதல் சோதனை!**இந்த நூலில் உள்ள எந்தக் கதை, (இங்கேயுள்ள) யாருக்குப் பொருந்தாது விட்டாலும், இந்தக்கதை பொருந்தாதவர்கள் (இங்கே) யாரும் இருக்கவே முடியாது.

தன்னுடன் கூட வேலை செய்தவன் நெஞ்சுவலி வந்து செந்துப்போனான். இவருக்கும் ஒருநாள் நெஞ்சு வலிக்கிறது. நினைவுகளின் அழுத்தத்தால் வலித்ததா, தசைநார்களில் இறுக்கத்தால் வலித்ததா என்று தெரியவில்லை.ஆனால், நெஞ்சு அவருக்கு வலிக்கும்போது, எவரெவர், நெஞ்சுவலியால் எப்படியெப்படி இறந்தார்கள் என்பதெல்லாம் அவரின் நினைவுக்கு வருகிறது.
செத்துப்போவேனோ என்று பயம் வருகிறது. கொடுத்தகடன், வாங்கிய கடன் எல்லாம் நினைவுக்கு வருகிறது.

ஊரிலுள்ள குடும்பத்தவர்களின் முகங்கள் எல்லாம், ஒவ்வொன்றாக நெஞ்சிலே படமாகத் தோன்றுகிறது.

ஆனால், வைத்திய பரிசோதனையிலே, பயப்படும்படியாக அவருக்கு எதுவுமே இல்லை

என்று தெரிகிறது. இந்தக் கதையிலே வருகின்ற சம்பவங்கள் எல்லாம், இங்கே வாழ்கின்ற நம்மைப் போன்றவர்களின் சரித்திரங்கள்!

எந்த உலகிலே எப்படி வாழ்ந்த நாம், இப்போது இந்த உலகிலே எப்படி வாழ்கின்றோம் என்பதற்கான சான்றுகள். இறுதியாக, சொல்ல வந்த கதையினைத் துல்லியமாகச் சொல்லுகின்ற திறமை,

நல்ல பல கருத்துகளை ஆங்காங்கே தூவி விடும் புதுமை, உலவவிடும் பாத்திரங்களின், உரையாடல் களிலேயுள்ள எளிமை,

பல்வேறு சம்பவங்களைச் சுவையாகத் தொடர்புறுத்தி, இடையிடையே செருகிவிடும் செழுமை, இவையெல்லாம் முருகபூபதியுடைய புலமை! இந்த நூலிலே நான் கண்ட பெருமை. எனவே எல்லோரும் இந்த நூலை வாசிக்க வேண்டும் என்று கேட்டு, வாசித்தால் யோசிப்பீர்கள், யோசித்தால் வாழ்க்கையை விசுவாசிப்பீர்கள் என்று கூறுகின்றேன்.

---0---

யன்னலருகே இருந்த மேசையின் மூலையில் சிறு தொட்டியில் வைக்கப்பட்டிருந்த ரோஜா செடிக்கு கிளாசில் இருந்த தண்ணீரை ஊற்றிவிட்டு அதன் மிருதுவான இலைகளை தடவிக்கொடுத்தார் முருகேசர். ஊற்றிய நீரை உறுஞ்சிய தொட்டிமண்ணை விரலினால் கிளறி ஈரப்பதத்தை பரிசோதித்து ஒரு திருப்தியுடன் வெற்று கிளாசை மேசையில் வைத்தார். அந்த அறையில் உயிர்ப்புடன் இருந்தது அவரும் அந்த செடியும்தான்!

அவரது அந்த அறை அத்தனை பெரியது அல்ல. ஒரு கட்டில் மூலையில் அவரதுஉடமைகளையும் உடைகளையும் வைக்க ஒரு கப்போர்ட், சாய்ந்திருக்க ஒரு சாய்மனைக்கதிரை, சுவரில் பதித்திருக்கும் 15" டி.வி, அதன் கீழ் ஒரு மேசை, மூலையில் உறங்கும் அவர் கைத்தடி, குளியலறையையும் டாய்லெட்டையும் இணைக்கும் ஒரு கதவு.

இதுவே அவர் உலகம். ஒரு வயோதிடர் விடுதியில் இவைகளை விட வேறு எதை எதிர்பார்க்க முடியும்? ஒரு மனிதன் மூப்படைய அவன் சஞ்சரிக்கும் பரப்பளவு குறைந்து கொண்டு போவது ஒரு சோகமான உலக நியதி. அந்த குறுகும் உலகைத் கூட கைத்தடி பிடித்து கடக்க வேண்டிய கட்டாயத்தையும் இறைவன் சமைத்துவைத்து விடுகிறான்!

அவரின் அறையில் ஹீட்டர் வசதிகள் இருந்ததால் மெல்பேர்ன் குளிர் அவரை தீண்டவில்லை. ஒன்பது வருடங்களுக்கு முன் பெற்றோர் இணைப்பு வீசாவில் கீழ் வந்துசேர்ந்ததால் அவருக்கு ஆஸ்திரேலிய பிரஜைக்குள்ள எல்லா வசதிகளும் உரிமையாகின. இளையவன் சபேசன் குடும்பத்துடன் எட்டு வருடங்கள் வாழ்ந்து ஒரு வருடத்திற்கு முன்தான் இந்த "றிவ சைட் ஏஜ்ட் கேர்" வாசியானார். இந்த இடப்பெயர்ச்சிக்கு சபேசன் பல காரணங்களை சொன்னாலும் தனது எண்பத்தி ஏழு வயதும் ஒரு காரணம் என்பதை அவர் அறிவார்.

“அப்பு, இஞ்ச தனிச்சுப்போவியள். நானும் செல்வியும் வேலைக்கு போனாப் பிறகு நீங்க விழுந்து கிழுந்து போட்டியள் எண்டா ஆரு பாக்கிறது? அங்க உங்கள நல்லா பாத்துக்கொள்ளுவினம். உங்கள குளிப்பாட்ட, சாப்பாடு பருக்க செல்வியால ஏலாதுதானே? அங்க உங்களுக்கு எண்டு ஒரு அறை தருவினம். குளிப்பாட்ட கிளிப்பாட்ட அங்க கெயாறஸ் இருப்பினம். சொன்ன வேளைக்கு சாப்பாடு....வருத்தம் வாதை எண்டாலும் உடனே டொக்டர அங்கயே வருவிப்பினம். இஞ்ச நானும் செல்வியும் வேலைக்கு போனாப்புறம் நீங்க தனிச்சு போவியள். மகள் ஆர்த்தியும் யூனிவர்சிற்றியும் படிப்பும் எண்டு ஒரே ஓடியபடியல்லோ இருக்காள்” என்று மகன் அடுக்கிய காரணங்கள் எல்லாம் அவருக்கு வெற்று வார்த்தைகளாகவே பட்டது. இதுவே இங்கு ஒரு நாகரீகமாய் போய்விட்டது.

வெள்ளைக்காரனின் சமூக சடங்குகளை பிரதியெடுத்து வாழும் வாழ்வுதான் உயர்ந்தது எனும் ஒரு மனப்பான்மை நம்மவர்களுள் குடிகொண்டு செழித்து வளர்வதை முருகேசர் அறியாதவர் அல்ல.

இன்று மாதத்தின் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமை. அவர் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கும் நாள் அது. மெல்பேர்ன் நகரின் வட-மேற்கில் இருக்கும் “சன்சைன் முதியோர் தமிழ் மன்றத்தின்” மாதாந்த சுற்றுலா நாள் இன்று. இந்த ஞாயிறுகளில் ஒரு பேரூந்தில் வீடுகளிலும் முதியோர்

இல்லங்களிலும் வாழும் மூத்தபிரஜை அங்கத்தினர்களை வந்து ஏற்றிக்கொண்டு ஒரு நாள் சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்று பின் மாலையில் வந்து இறக்கி விடுவார்கள். முருகேசர் தவறாமல் கலந்துகொள்ளும் நிகழ்வு இது. முதியவர்களையும் சமுதாயத்தில் ஒரு துடிப்புள்ள பிரஜைகளாக வாழவைக்க ஆஸ்திரேலிய அரசாங்கம் முன்னெடுக்கும் சமூகநல முயற்சிகளில் இதுவும் ஒன்று.

பயணத்தின் போது வாய்க்கு ருசியான உணவு வகைகள் பரிமாறப்படுவதும் ஒரு விசேடம். யாழ்ப்பாணத்து கறித்தூளும் தாளித்த கருவேப்பிலையின் நறுமணமும் கட்லட், பற்றீஸ் என்ற பெயரில் பேரூந்தை நிறைக்கும்.

ஏஜ்ட் கெயாரில் பரிமாறப்படும் “வெள்ளைக்காரனின்” உணவு வகைகளை விழுங்கி மரணித்த முருகேசரின் நாவு விழித்துக் கொள்ளும். “காஞ்சி போன ரொட்டி துண்டும் சூப்பும் இவரு டின்னர்” எனும் பாடலை ஞாபகமூட்டும் சாப்பாடு வகைகளை உண்டு அவருக்கு அலுத்துவிட்டது. இடையிடையே செல்வியின் சமையலை சபேசன் கொண்டுவந்து பரிமாறும்போது தான் இழந்தது உறவுகள் மட்டுமல்ல என்பதை எண்ணிக்கொள்வார்.

இன்று கடற்கரை விஜயம். அங்கு போகும் வழியில் ஒரு உள்ளூர் மார்க்கட்டுக்கும் அழைத்துச் செல்வதாய் அழைப்பு சொல்லிற்று. பேரூந்து கலகலவென்று சம்பாஷணைகளில் நிரம்பி வழிந்தது. தமது வலிகளையும் வாதைகளையும் பகிர்ந்து கொள்பவர்கள், தம் தனிமையையும் புறக்கணிப்புகளையும் மறைக்க கோமாளி முகமூடிகளை அணிந்த சில முகங்கள், “இன்னும் எத்தனை நாள் இப்படி?”என்ற

ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் உருவங்கள், கடந்த கால இன்ப நினைவுகளை மீட்டெடுக்க தூண்டில்

போடும் சில சிந்தனை முகங்கள், வழுக்கிச் செல்லும் நினைவுகளை வலிந்து பற்றி வார்த்தைகளாக்கி பகிரும் கதைசொல்லிகள் என பல வகை மூத்தோர் கூட்டம்.

அவர்கள் மாற்றியமைக்க நினைத்த உலகே அவர்களை சிறைப்படுத்தி வைத்த சோகம் பலர் முகங்களில் கோடிழுத்து நின்றன.

முருகேசர் தன் சக பயணி நண்பரான துரைராஜாவுடன் அமர்ந்துகொண்டார். இருவருக்கும் உலக அரசியலில் ஈர்ப்பு இருந்தமையினால் அதுவே அவர்கள் உறவிற்கு பசையானது.

அரைமணி நேரத்திலேயே பேரூந்து அந்த “சண்டே மார்க்கட்” எனும் சந்தைக்கு வந்து சேர்ந்தது. “கெதியா இறங்கி பார்த்திட்டு வந்துருங்கோ.....வெய்யில் ஏற முன்னம் போகவேணும் கண்டியளோ” என்ற கட்டளைக்கமைய எல்லோரும் பஸ்சை விட்டு இறங்கினர்.

இந்த மார்க்கட்டில் உணவு வகைகள், தோட்டத்து காய்கறிகள், பழைய உடைகள், புத்தகங்கள், தோட்டவேலை செய்வதற்கான பாவித்த உபகரணங்கள், பூச்செடிகள், மற்றும் ‘தட்டு முட்டு’ சாமான்கள் என பல வகை பண்டங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. அனேகமானவை பாவித்த பொருட்களும் “கராஜ் சேல்” என்ற வீட்டு வாசல் விற்பனையில் மலிவு விலையில் வாங்கி விற்பனைக்கு வைக்கப்பட்டவை.

முருகேசரும் துரைராஜாவும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களில் அத்தனைஆர்வமின்றி நடைபயின்றனர்.

“அங்க பாத்தியளோ?....நம்மட ஊர் நடராசர் சிலை போல கிடக்குது. உது எங்க இஞ்ச வந்தது?” என்ற துரைராஜாவின் கேள்வி முருகேசரின் கவனத்தை அந்த மேசையில் பரப்பி வைக்கப்பட்டிருந்த ‘தட்டு முட்டு’ சாமான்களுடன் கிடத்தி வைக்கப்பட்டிருந்த அந்த நடராசர் சிலை மேல் திருப்பிற்கு.

ஆம், அது உண்மையே. வெங்கலத்தால் செய்யப்பட்ட வட்டமான சிலை. நடராசர் நர்த்தனம் புரியும் சிலை வடிவம். அதைத் தூக்கி அதன் பின்புறம் ஒட்டியிருந்த வெள்ளை காகிதத்தில் எழுதியிருந்த விலையை பார்த்தார். $10 என்று எழுதியிருந்தது.

“நல்ல வடிவான சிலை.... தனி வெங்கலத்தில செய்திருக்கினம்..... உதப்போல ஒரு சிலைய தேடித்திரியிறன்.... விலைய கேட்டுப்பாப்பம். $5க்கு தருவானோ தெரியாது.”;

“ஓம், நல்லாத்தான் இருக்குது ....விருப்பம் எண்டால் கேட்டுப்பாரும்” என்ற துரைராஜாவின் அங்கீகாரத்தால் உந்தப்பட்ட முருகேசர் மேசையின் மறுபுறம் நின்றவனிடம் தன் பேரத்தை வார்த்தைகளாக்கி “கான் ஐ ஹாவ் இட் ஃபோர் $5?”

“நோ சேர்.... வட் எபவுட் $8?”

இது எட்டு வெள்ளிக்கு லாபமே என்பதை அவர் மனக்கணிப்பு சொல்லிற்று. பணம் கைமாற நடராசர் முருகேசரின் உடமையானார்.

மாலை ஆறு மணிக்கு சுற்றுலா முடிந்து ஏஜ் கேருக்கு வந்து சேர்ந்த முருகேசருக்கு இரவு உணவு அவரது

அறை மேசையில் தயாராக காத்திருந்தது. அவருக்கோ ஊர் சுற்றிய களைப்பு. ஒரு ‘காக்காய் குளியலுடன்’ தலையை துவட்டிவிட்டு கட்டிலில் அமர்ந்து தான் அன்று சந்தையில் வாங்கிய நடராசர் சிலையை கையிலேந்தி பழைய நினைவுகளில் மூழ்கினார்.

நினைவுகள் அவரும் மனைவி பாக்கியமும் இன்பமாய கழித்த நாட்களுக்கு அவரை இழுத்துச் சென்றன.

X X X X X

திருமணமாகி ஒன்பது மாதங்கள் கடந்திருக்கும். இருவரும் தமிழ்நாட்டு திருத்தலங்களை தரிசிக்கும் எண்ணத்தில் திருச்சி வந்திறங்கி பின் சில திருத்தலங்களை தரிசித்த பின் சிதம்பரம் நடராஜர் கோவிலை வந்தடைந்தனர். ஆகம விதிமுறைகளின்படி அமைக்கப்பட்டிருந்த

ராஜகோபுரங்களின் கம்பீரமும் அழகும் அவர்களை பிரமிக்கவைத்தது. கிழக்கே அமைந்திருந்த ராஜகோபுரத்தில் இருந்த நாட்டியத்தின் 108 கரணங்களை பிரதிபலிக்கும் சிற்பங்களை பாக்கியம் வியப்புடன் பார்த்து “உதுகளையெல்லாம் எப்படித்தான் கட்டியிருப்பினமோ?” என்று கூறி வியந்தாள். எல்லா சன்னதிகளையும் கோயிலின் தீர்த்தக்குளமான ஆனந்ததீர்த்தத்தையும் பார்த்தபின் பிரகாரத்தை சுற்றி வந்து பூஜை செய்து பின் கோயிலை விட்டுவெளியே வந்தனர். கோயிலின் முன்னால் இருந்த கடைவீதியில் பல விதமான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. தெய்வீக உணர்வில் திழைத்திருக்கும் பயணிகள் மென்மனதில் வாழைப்பழத்தில் ஊசியாக’ வணிகம் சொருகப்படும் தலங்கள் இவை.

அவர்களை கவர்ந்தது அழகான வெண்கல மற்றும் பித்தளை விக்கிரகங்கள் விற்கும் அந்த சிறிய கடை.

“ஐயா….நல்ல டிசைன் சிலைகளுங்க. நாங்க வாங்கி விக்கிறதில்லீங்க.எல்லாம் எங்கட தயாரிப்புங்க… இங்க சிலைய வாங்குநாக்கா நாங்களே பிஃரீயா எழுத்த பொறித்துத் தருவமுங்க….வேற இடத்தில வாங்கினீங்க….. அதுக்கு வேறா சார்ஜு பண்ணுவானுங்க” என்ற கடைப்பையனின் விற்பனை மந்திரம் எந்த கஸ்டமரையும் கட்டிப் போட்டுவிடும்.

பாக்கியம்தான் சிலை வாங்குவதில் மும்முரமாய் இருந்தாள். “சும்மா காசப்பாக்கம ஒண்ட வாங்குவம். சாமி அறைக்கும் ஒண்டு வேணும். இஞ்ச வாங்கின ஞாபகமும் இருக்குமல்லோ….இல்லாட்டி பேந்து துக்கப்படுவம்”

மனைவியின் கெஞ்சலுக்கு இழகிய முருகேசர் பாக்கியம் தெரிவு செய்தஒரு நடராசர் சிலையை வாங்கி அவள் கைகளில் திணித்து “சரி…சிலையில என்ன எழுதப்போறீர்?” என கேள்வியை தொடுத்தார். பிரபஞ்சத்தின் வட்டத்தினுள் நடராசர் வலது கையில் அபய முத்திரையையும் இடது காலை உயர தூக்கியும் ஆனந்த தாண்டவம் ஆடும் உருவச்சிலை அது.

முருகேசரின் கேள்விக்கு பாக்கியம் பதில் அளிக்கும் முன்பே இடையில் குறுக்கிட்ட கடைப்பையன் “என்ன பொறிச்சுத் தரணுமினு இந்த பேப்பர் துண்டில எழுதிக் தாங்க

அம்மா...மிஸ்டேக் இல்லாம் தமிழில எழுதித் தரணுமுங்க".

பேப்பரை வாங்கி பாக்கியம் ஒரு கண யோசனையில் பின் பேனாவால் "என்ர ராசாவுக்கு" என எழுதி பையனிடம் கொடுத்தார்.

அதை படித்த பையனின் முகம் கோணலானது. கண்களை குறுக்கி மூக்கை சுழித்து "அம்மா,

'எனது ராஜாவுக்கு' அப்படீணு சுத்த தமிழ்ல பொறிச்சி தரட்டுமா?"

"ஐயோ வேணாம்...நீ ஒண்டும் மாத்த கீத்த வேணாம். அதயே பொறித்துத் தா" என்று ஒரு ரகசியத்தை கூறுவது போல்சொன்ன பாக்கியத்தின் முகம் பெண்மைக்கே உரிய வெட்கத்தால் சிவந்தது. குறும்புக்கார பையனின் கேள்வி தொடர்ந்தது. "அப்படீனா ராசாவுக்கு அப்புறம் ஐயாட பேர பொறித்......" அவன் வார்த்தையை முடிக்கும் முன்னே இடைமறித்த பாக்கியம் "அது ஒண்டும் தேவையில்ல. நான் சொன்னத செய்.....அவர விட்டா எனக்கு வேறு யாரு ராசா?" என கூறிவிட்டு பையனிடம் அதிகப்பிரசங்கித்தனமாக பேசிவிட்டேனோ என்ற உணர்வில் நாக்கை கடித்துக்கொண்டார்.

கடைக்குள் வேறு சிலைகளை பார்த்துக் கொண்டிருந்த முருகேசரின் காதுகளுக்கும் மனைவியின் இந்த சம்பாஷணை எட்டாமல் இல்லை. பாக்கியத்தின் வார்த்தைகள் அவர்

இதயத்தை நெருடிச் சென்று ஒரு இதமான இன்ப அனுபவத்தை விதைத்துச் சென்றது. இந்த மென் உணர்வுகளுக்கு மானுடர் எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் ஒரு கணவனை மனைவி அன்பினால் சிறைப்படுத்தி உரிமை கொண்டாடும் இத் தருணங்கள் புனிதமானவை. பண்பாடுகளும் கலாச்சாரங்களும் அந்த உணர்வுகளுக்கு வேலி அமைத்து மண்மூடி மறைக்க எத்தனித்தாலும் மண்ணை மீறிய விதைகளாய் அவை என்றும் ஏதோ ஒரு வடிவத்தில் புலப்பட்டு தன் உரிமைகளை மீட்டுக்கொள்ளும்!

பாக்கியம் பதினைந்து வருடங்களுக்கு முன் புற்றுநோயால் மறைந்த பின்பும் அந்த நடராசர் சிலைக்கு சாமி அறையில் முதன்மை ஸ்தானத்தை அளிக்க முருகேசர் தவறவில்லை.

ஆஸ்திரேலியாவிற்கு புலம்பெயர்ந்த போதும் முருகேசர் கூட பயணித்து மகன் சபேசனின் வீட்டில் குடிகொண்டார் நடேசர்.

ஒரு வருடத்திற்கு முன் முருகேசர் இந்த 'ஏஜ் ட் கெயார்'க்கு வர பெட்டியை அடுக்கும்போது மகன் சொன்னது இன்னும் ஞாபகமே. "அப்பு, உதுகள எல்லாம் கட்டி சுமக்க வேணுமே? அங்க உங்கட அறையும் அப்பிடி ஒண்டும் பெரிசில்ல. இத இஞ்ச வச்சிற்றுப் போங்கோவன். நாங்க என்ன பாத்துக்க மாட்டமா?" சபேசனின் வார்த்தையில் இருந்த அழுத்தத்தை அவர் புரிந்துகொண்டார். ஆனாலும் அவனுக்கு சிலையாக தெரிந்த நடராசர் அவருக்கோ பாக்கியத்திடம் இருந்து புறப்பட்ட அந்தரங்க உணர்வுகளின் அடையாளம்.

பாக்கியத்துடன் வாழ்ந்த இன்ப நினைவுகள் அவர் மனதில் வரிசை கட்டி நின்றன. காலக் குடுவையின் சிறு

துளையில் வடியும் மணல் பருக்கைகளாய் அவர் வாழ்வு மங்கிப் போய் கொண்டிருக்கும் இந்த முதிர்வயதில் அந்த இனிய நினைவுகளை மீட்டெடுக்கும் எந்த ஒருசடப்பொருளும் அவருக்கு தோணியின் துடுப்பாய்ப் பட்டது.

வாழ்க்கை எனும் வானத்தில் மிதக்கும் முகில் கூட்டங்களாய் அவரின் நினைவுப்பஞ்சுகள் மெல்ல மெல்ல அவரை விட்டு எங்கோ தூர ஓடி மறைகின்றன!

நடராசர் சிலையை கையில் ஏந்தியபடி கட்டிலில் அமர்ந்திருந்த முருகேசரின் கண்களில் பாசத்தின் ஊற்றாய் நீர் முட்டி கன்னங்களை நனைத்து சிறு துளிகளாய் சிலையில் விழுந்து தெறித்தன. சிலையில் பின்பகுதியில் ஒட்டியிருந்த $10 என எழுதியிருந்த காகிதத்தையும் நனைக்க அவை தவறவில்லை. அவரை அறியாமல் அவர் விரல்கள் சிலையில் ஒட்டியிருந்த அந்த காகிதத்தை சுரண்டி அகற்றியது. சிலையில் பொறித்திருந்த “என்ர ராசாவுக்கு” என்ற வார்த்தைகள் அவரைப் பார்த்து சிரித்தன!

நடுங்கும் கைகளால் சிலையை மெதுவாய் உயர்த்தி நெஞ்சுடன் அணைத்த அவரின் வாயில் இருந்து “என்ர குஞ்சு” என்ற வார்த்தைகள் ஒரு மந்திர உச்சரிப்பாய் காற்றில் கலந்து மறைந்தன.

நன்றி: சொல்வனம்

-----o-----

தங்கள் அன்பிற்கும் ஆதரவிற்கும்
அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய சங்கத்தின் நன்றிகள்!

இந்த இதழை அலங்கரித்த அனைத்து படைப்பாளிகளுக்கும் எமது நன்றி.

சித்திரை பூமராங் இதழ் மகளிர் தின சிறப்பிதழாக மலர்கிறது.
உங்கள் ஆக்கங்களை atlas25012016@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு தயவுடன் அனுப்பிவைக்கவும்.

தொடர்ந்து பயணிப்போம்!

இச் சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும்
அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

வணக்கம்

நன்கொடை மற்றும் விளம்பரத் தொடர்புகளுக்கு:
atlas25012016@gmail.com